அதிகாரம் 1

# கிறிஸ்து தீர்க்கதரிசிகளையும் மற்றும் தேவதூதர்களையும் விட மேலானவர்

## (பகுதி 1)

எபிரெயரின் ஒப்பற்ற திறவு கிறிஸ்துவை தெய்வீக இயல்புடையவராகவும் மற்றும் மகிமையுடையவராகவும் காட்சிப்படுத்துகிறது (1:1-2:4). உண்மையில், அவர் தேவதூதர்களையும் மற்றும் கடந்த காலத்து தீர்க்கதரிசிகளையும் விட மேலானவராக இருக்கிறார். இதன் விளைவாக, அவருடைய குமாரன் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள இந்த பெரிதான இரட்சிப்பை அலட்சியம் செய்பவர்கள் தங்களை நித்திய அழிவிற்குள் இருப்பவர்களாக காண்பார்கள். உண்மையில், எபிரெயரின் முழு ஆய்வுகட்டுரையின் அடிப்படை வடிவமானது புதிய உடன்படிக்கையை உயர்த்திக்காட்டி, பழைய உடன்படிக்கையின் இடத்தில் இதை அமர்த்துவதாகும்.

தண்ணீர்கள் கடலின் மேல் அடுக்கை நிரப்புவதைப்போல, கிறிஸ்துவின் ஆளத்துவமானது முதல் மூன்று அதிகாரங்களையும் நிரப்புகிறது. நம்முடைய கர்த்தருடைய மகத்துவத்தின் காரணத்தினால், இந்த புத்தகம் எழுதப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை பாதுக்காத்து கொள்ளவும், அவர்களிடமிருந்து சுவிசேஷத்தை செயலற்றுப்போக விட்டு விடாமலிருக்கவும் வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் (2:1-3). செய்தியிலிருந்து செயலற்றுப்போகுதலானது, செய்தியாளரிடமிருந்து செயலற்றுப் போகுதலாகும், ஏனெனில் செய்தியையும் செய்தியாளரையும் வேறுபிரித்துப் பார்க்க முடியாது. இந்த ஆசிரியரின் பிரகாரம் “கிறிஸ்து எதிராக உபதேசம்” என்ற நிலையே இல்லை, ஏனெனில் கிறிஸ்துவும் அவருடைய உபதேசமும் பிரிக்க இயலாதவைகளாகும். செய்தி சரியாக பாராட்டப்படுமெனில் அந்த செய்தியின் செய்தியாளர் உயரிய

மதிப்பிற்குரியவராக கருதப்பட வேண்டும்.

இந்த ஆரம்ப வாக்கியங்களில், இதன் ஆசிரியர் மோசே மற்றும் தீர்க்கதரிசிகளின் முழுமையற்ற வெளிப்பாடுகளின் மேல் குமாரனின் மூலம் கிடைக்கப்பெற்ற முற்றிலும் உயரிய வெளிப்பாட்டை காட்டுகிறார். இயேசுவின் மூலம் அளிக்கப்பட்ட தேவனுடைய வெளிப்பாடே இறுதி வார்த்தையாகவும், பழைய ஏற்பாட்டின் ஒசைகள் அனைத்தும் சுட்டுகிற தேவனுடைய இறுதி வெளிப்பாடகவும் இருக்கிறது. குமாரனுடைய செய்திக்கு முன்னர் கொடுக்கப்பட்ட எந்த செய்தியும் கிறிஸ்துவின் வழியாய் பிதாவாகிய தேவனுடைய இறுதி ஓசையாக நம்முடைய கவனத்தை ஈர்த்துப் பிடிக்கும்படிக்கு கொடுக்கப்படவில்லை.

ஆகவே, இதன் ஆசிரியர், புதிய ஏற்பாட்டு காலத்திற்கு பின்னர் காணப்பட்ட எந்த மத செய்தியும் “தெய்வீகமானதாக” அழைக்கப்பட முடியாது என்று விவரித்து உணர்த்துகிறார். கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்பட்ட வெளிப்பாடானது பரலோகத்திலிருந்து வருகிற ஒரு தேவதூதனாலும் கூட மாற்றியமைக்கக் கூடியதல்ல (கலா. 1:6-9). இது “ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசமாக” இருக்கிறது, அதாவது இதன் பொருள் என்னவெனில் “எல்லா காலத்திற்கும்” கொடுக்கப்பட்டதாகும் (யூதா 3; NLT). கிறிஸ்துவின் வெளிப்பாடானது பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் தீர்க்கதரிசியின் மூலமாக வகைவகையாக கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டிற்கு வேறுபட்டிருக்கிறது. “படிப்படியாக முன்னேற்றமடைகிற வெளிப்பாடு” பழைய ஏற்பாடு முழுமையிலும் நிகழ்ந்தது, ஆனால் கிறிஸ்துவில் இது நிறைவடைந்தது.

கிறிஸ்துவினுடைய வெளிப்பாடானது அப்போஸ்தலர்களின் எழுத்தும், புதிய ஏற்பாட்டு காலத்து ஏவுதல் பெற்ற மற்ற மனிதர்களையும் உள்ளடக்கியுள்ளது. அவர் அவர்களை அனுப்பினார், அவர்களை ஏவும்படிக்கு அவர் பரிசுத்த ஆவியை அனுப்பினார்; ஆகவே யாரெல்லாம் அவர்களை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறார்கள் (லூக். 10:16). கிறிஸ்துவின் வழியாக நாம் இந்த உலகம் இருக்கும் வரை மாற்றக் கூடாத இறுதியாக “மேன்மையானதை” பெற்றிருக்கிறோம்.

## கிறிஸ்து தீர்க்கதரிசிகளை விட மேலானவர் (1:1-3)

### தேவன் திருவுளம் பற்றினார் (1:1, 2)

**1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன்,**
**2 இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத்**

**திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.**

**வசனம் 1.** இந்த பெரும் புத்தகம் ஒருதெய்வீக வெளிப்பாட்டின் மாபெரும் தனியொரு உண்மையை பிரகடனப்படுத்துகிறது: **திருவுளம்பற்றின தேவன்.** வேதத்திலிருக்க வார்த்தைகளாலும் மற்றும் தம்முடைய குமரானாகிய இயேசுவின் மூலமாகவும் பேசியிருந்தார், இந்த சத்தியமானது விசுவாசத்தின் மையப்பொருளாக அமையப்பெற்றிருக்கிறது. தேவன் நம்மோடு பேசியிருக்கிறார் என்று அறிவது நம்முடைய ஆவிக்கு எவ்வளவு உற்வாசமூட்டுகிறதாக இருக்கிறது! அனைத்து சத்தியங்கள் மற்றும் அனைத்து வெளிப்பாடுகளின் இறுதி மூலாதாரமான அவர் நம்மோடு தொடர்பு கொண்டிருக்கிறார். "தேவன்" (θεος, *தீயோஸ்*) என்ற வார்த்தையானது (ό, *ஓ*) என்ற குறிப்பான வார்த்தையால் முற்படுகிறது, இது பழைய ஏற்பாட்டு எழுத்துக்களால்; அறிந்து ஏற்கெனவே வெளிப்படையாக ஆராதித்துக் கொண்டிருக்கிற "அவரே தேவன்" என்பதை சுட்டுகிறது.

*தெயோஸ்* என்ற வார்த்தையானது "மனித காரியங்களில் அசாதாரணமாக கட்டுப்படுத்துகிற அறிவெல்லையைக் கடந்த ஒருவர்"[1] என்று பொருளாகும். தேவர்கள் அனைத்து காரியங்களையும் அதனதன் இடத்தில் அவற்றை சரியான விதத்தில் அமையச் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.[2] பழைய ஏற்பாட்டில் தேவன் (אֱלֹהִים, *ஏலோஹிம்*), வல்லமையுள்ளவர், முழு அதிகாரமுடைய ஒருவர் என்று அறியப்பட்டார். அதன் பின்னர் அவர் தம்மை "யாவே" (יהוה, *யாவே*) "இருக்கிறவராகவே இருக்கிறவர்" அல்லது "வரம்பற்ற மெய்ம்மை" இதன் பெருள் அவர் நித்தியமான "இருக்கிறவராக இருக்கிறேன்" என்பவர், மற்றவைகள் எல்லாம் அவரிலிருந்து வருவிக்கப்பட்டவைகள் என்று மோசேக்கு வெளிப்படுத்தினார் (யாத். 3:14; 6:3).

**பூர்வ காலங்கள்** என்பது "கடந்த காலமாகும்" (KJV). இந்த சொற்றொடர் எழுத்துப்பூர்வமாக "பழைய" அல்லது "பண்டைய காலங்களில்" என்று பொருள்படுகிறது. ஒருவேளை நாம் இந்த இரு வார்த்தைகளை கொண்ட சொற்றொடரை முழு பழைய ஏற்பாட்டுக் காலத்தையும் குறிப்பிடக் கூடியதாக சிந்தனை செய்யக் கூடும்.

மல்கியாவிற்கு பின்னர் எழுதப்பட்ட எந்த புத்தகத்தையும் யூதர்கள் சட்டப் பூர்வமானதாக ஏற்றுக்கொள்ளவில்லை. உதாரணமாக அவர்கள் இணைத்திருமறை அதாவது தள்ளுபடியாகமத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.[3]

பழைய ஏற்பாட்டு **தீர்க்கதரிசிகள்** தேவன் கூறினதுபோன்று எழுதினார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு (2 பேதுரு 1:20, 21), குறையறிவுள்ளவர்களாக இருந்தாலும் அவர்கள் அவருடைய வழிகாட்டுதலினால் எழுதினார்கள். அவர்கள் எதைப் பேசினார்கள் என்று எப்போதும் புரிந்திருக்கவில்லை, ஆனால் அவர்கள் எழுதின

தீர்க்கதரிசனத்தில் முன்குறித்த காலம் எது என்பதைக் குறித்து ஊக்கமாக ஆராய்ந்தார்கள் அல்லது படித்தார்கள் (1 பேதுரு 1:10, 11).

பொழிப்புரை மற்றும் மொழியாக்கங்களின் திரட்டலாகிய ஆம்பிலிஃபைட் வேதாகமமானது (AB) 1 ஆம் வசனத்தை இப்படியாக கொண்டுள்ளது: பல தனித்தனியான வெளிப்பாடுகளிலும் மற்றும் பல வழிகளிலும் [ஒவ்வொன்றும் ஒரு பங்கு சத்தியத்திற்காக அமைக்கப்பட்டது] [நம்முடைய] முற்பிதாக்களிடம் தீர்க்கதரிசிகளின் வழியாய் தேவன் பேசினார்," தாமஸ் ஜி, லாங்க் அவர்கள் இந்த வசனத்தின் கடைசி பகுதியை இவ்வாறு மொழிபெயர்த்தார்: "பல முழுமையற்ற கூறுகளாகவும் மற்றும் பல பாணிகளிலும்."[4] இந்த வாக்கியம் "சிலபல காலங்கள்" (KJV), "பல்வேறு காலங்கள் மற்றும் பல வழிகள்" (NKJV; NIV), மற்றும் "பலவித அரைகுறையான" (பிலிப்ஸ்) என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர், தேவனுடைய நித்திய வசனங்கள் வெளிப்பாடு களில் அரைகுறையாக மட்டுமே கொடுக்கப்பட்டது. Πολυμερῶς, (பொலுமெரோஸ்) "பல பங்கு," "பகுதிகள்" அல்லது "சிறிது சிறிதாக" என்று பொருள்படுகிறது. பகுதியாக, துண்டுகளாக, முழுமையற்ற கூறுகளாக கொடுக்கப்பட்டவைகள் யாவும் நிச்சயமாக முழுமையற்றவைகளாகவே இருக்கவேண்டும். ஆனால்; புரூக் ஃபோஸ் கவனித்தபடி "குமாரனாகிய கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்பட்ட வெளிப்பாடானது அதனுடைய மூலப்பொருள் மற்றும் வடிவம் ஆகிய இரண்டிலும் பூரணமானதாக இருக்கிறது."[5] இது வெளிப்பாடுகளை "பகுதியாக" அளிக்கும் ஆவிக்குரிய வரங்களின் நோக்கத்தோடு இசைவுபடுத்துகிறது (1 கொரி. 13:8-10). AB யின் இந்த பகுதியின் மொழிபெயர்ப்பும் தீர்க்கதரிசிகளுக்கு அளிக்கப்பட்ட ஏவுதலைப் பற்றி தேவன் மனிதனிடம் அவர்கள் மூலமாக பேசினார் என்று உரிமை கோருகிறது. எஃப்.எஃப் புரூஸ் அவர்கள் அதே உண்மையை இந்த விதமாக வெளிப்படுத்தினார்: ஆசாரியர் மற்றும் தீர்க்கதரிசிகள், பரிசுத்தவான் மற்றும் பாவி ஆகியோர் அவர்களுடைய பல வழிகளில் அவருடைய சார்புப்பேச்சாளர்களாக இருக்கின்றனர்; எனினும் கிறிஸ்துவிற்கு முந்திய காலங்களில் வந்த வெற்றிகரமான செயல்களும், மாறுபட்ட வெளிப்பாட்டின் வழிகளும் தேவன் என்ன சொல்ல வந்தாரோ அதன் முழுமையை எட்டவில்லை.[6]

ஆக, உண்மையானது இது தான்: தேவன் அவர் பழைய ஏற்பாட்டை கொடுக்கும்போது **பல பங்குகளாகவும் மற்றும் பல வழிகளிலும் பேசினார்**. அவர் சில நேரம் ஆசாரியர்கள், சொப்பனங்கள், நிகழ்வுகள் மற்றும் சரித்திரம் ஆகியவற்றின் மூலமாக பேசினார். சில சமயங்களில் தீர்க்கதரிசிகள் அந்த செய்திகளை எழுதுவார்கள், சில சமயங்களில் தேவன் ஒரு தீர்க்கதரிசியின் சைகை மூலமாகவும் பேசினார்.

தேவன் ஒரு நெடிய, தொடர்ச்சியான உரையாடலில் இஸ்ரவேலரோடோ அல்லது **முற்பிதாக்களோடோ** பேசாமல், ஆனால் பல்வேறு காலங்களில், இடங்களில், மற்றும் அரைகுறையாகவும் பேசினார். "கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்த காலமும்" மற்றும் "பிரத்தியட்சமான தரிசனம் இல்லாமலும்" இருந்தது (1 சாமு. 3:1). எப்படியாயினும், இவற்றை ஒன்றாக இணைத்துப் பார்க்கும்போது, இவையனைத்தும் ஒரு முழுமையான இசைவை உண்டாக்குகிறது. ஏனென்றால் இது தேவனிடமிருந்து பேசுகிற அதே ஆவியானவரால் ஏவப்பட்டதாக இருக்கிறது. ஆகவே பழைய மற்றும் பதிய ஏற்பாடுகள் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட வெளிப்பாடாக இருக்கிறது, மேலும் இரண்டு ஏற்பாடுகள் இருந்தாலும் "இரண்டு வெளிப்பாடுகளை" பற்றி பேச வேண்டிய அவசியமில்லை.

**வசனம் 2.** இந்த கடைசிக் காலத்தில் அல்லது **இந்த நாட்களின் இறுதியில்** (ASV), என்ற சொற்றொடரின் பொருளானது, "சமீபத்தில்" என்பதை விட இன்னும் சற்று அதிகமானது. இந்த சொற்றொடரானது ஒரு இறுதிக் காலத்தின் தொடக்கத்தை சுட்டுகிறது. அப்போஸ்தல எழுத்தாளர்கள் தங்கள் சொந்த நாட்களை "கடைசி நாட்களாக" எண்ணினார்கள் (அப். 2:17; யாக். 5:3), இந்த கடைசி நாட்களில் (1 பேதுரு 1:20) அல்லது "கடைசி நாட்கள்" (யூதா 18) நாம் வாழ்கிற இந்த காலமே கடைசிக் காலமாக இருக்கிறது. இது இயேசு பரமேறி பரிசுத்த ஆவியை அனுப்பினதிலிருந்து நம்முடன் இருக்கிறது. பேசப்பட்ட இந்த நாட்களானது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பின்தொடர்ந்து பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கினது மேலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை இது தொடரும்.

எனவே, இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள "கடைசி நாட்களானது" மேசியாவின் காலத்தைக் குறிப்பிடுவதாகும்; அதைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை, அல்லது இவைகள் கடைசி நாளாக இருக்க முடியாது. ஜேக் பி. லூயிஸ் இவ்வாறு கூறி இதை குறிப்பிட்டார், இதன் ஆசிரியர் தன்னுடைய சொந்த காலத்தை "இந்த கடைசி" நாட்கள் என்று அடையாளப்படுத்துகிறார்.[7] இங்கு தீர்க்கதரிசிகளோடு தேவன் பேசின *பூர்வ காலத்திற்கும்* மற்றும் *இந்த கடைசிக்காலத்திற்கும்* இடையேயுள்ள ஒப்பிட்டளவு வேறுபாடு என்னவெனில் முதலாமானது "முன்னோடி" மற்றும் அடுத்தது "இறுதியானது."[8] இந்த இறுதியான செய்தியானது சர்வ வல்லமையுள்ள தேவனிடமிருந்து வந்த கடைசியானதாகவும், மற்றும் உறுதியான வார்த்தையாகவும் இருக்கிறது. புதிய உடன்படிக்கையானது, பழையது போன்றல்லாமல், இதன் தலைமைத்துவம், இதன் ஆசாரியத்துவம், மற்றும் தனித்துவம் வாய்ந்த நித்திய குமாரனை[9] சேர்ந்த இதன் இராஜ்ஜியத்தின் காரணத்தால் இறுதியானதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்பட்ட

வெளிப்பாட்டிற்கு பின்னர் ஒரு தனிவேறுபட்ட புதிய வெளிப்பாட்டிற்கு இடமே இல்லை. இந்த பழைய மற்றும் புதிய ஆகிய இரண்டிற்கும் தேவனே ஆக்கியோனாக இருக்கிறார், ஆனால் இறுதியான ஒன்றிற்காக அவர் பலவிதங்களில் பேசினார்.

தேவன் தீர்க்கதரிசிகள் மற்றும் குமாரன் மூலமாக பேசினதற்காக பயன்படுத்தப் பட்டுள்ள கிரேக்க வினைச் சொல்லின் λαλέω (*லாலியோ*) பொது இறந்த காலத்தை எபிரெய நிருபமானது தேவன் இனியும் பேசிக்கொண்டிருக்கவில்லை என்று பரிந்துரைக்கிறது. புரூஸ் அவர்கள் சரியான கருத்துக்குறிப்பை தருகிறார், "தெய்வீக வெளிப்படுத்துதலின் கதையானது, கிறிஸ்து வரை முன்னேறும் கதையாகும், ஆனால் அவருக்கு அப்பால் முன்னேற்றமில்லை."[10] இது புதிய ஏற்பாடானது மனுக்குலத்திற்கு தேவன் தந்த அவருடைய இறுதி வெளிப்பாடு என்று தீர்மானம் செய்வதற்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. இந்த பரந்த உண்மையை மறுப்பது, ஒரு புதிய வேதத்தை கொடுப்பதற்கு ஒருவரால் இயலும் அல்லது ஏற்கெனவே நாம் பெற்றிருப்பதுடன் பகுதிகளை சேர்க்கக் கூடும் என்று உரிமைகோருவதாகும்!

கடந்த காலத்தின் ஓசைகள் இயேசுவை விட தாழ்ந்ததாக காட்டியிருந்தது. இதில் தேவதூதர்கள் (1:4-2:18), மோசே (3:1-4:7), யோசுவா (4:8-13), மற்றும் ஆரோன் வழி ஆசாரியத்துவம் (4:14-7:28) ஆகியோர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் ஆசிரியர் ஒரு மனித தொடர்பாளரை அனுமதிக்கிறார், ஆனால் தேவனே பழைய ஏற்பாட்டின் உண்மையான பேச்சாளராக இருந்தார் (3:7; சங். 95:7ல் மேற்கோளிடப்பட்டிருப்பதை காணவும்). கிறிஸ்துவானவர் பழைய ஏற்பாடும் "தேவனால் உரைக்கப்பட்டது" (மத். 22:31, 32) என்று குறிப்பிடுகையில் அவருடைய அகவுணர்வைக் குறித்து கண்ணோட்டமும் இதேபோன்றுள்ளது. மேலும் "தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை (வேதவாக்கியமும் தவறாததாயிருக்கிறது)" என்று கூறும்போது வசனத்தில் ஜீவிக்கிற வல்லமையை குறித்தும் யோவான் 10:35 லும் சுட்டினார். தேவனுடைய வார்த்தை என்றென்றைக்குமானது. இது எப்போதும் பொருந்தக் கூடியதும் ஆற்றல்மிக்கதுமாக இருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் தேவன் கூறியிருப்பவைகளை இந்த புத்தகத்தின் ஆசிரியரும் ஆதி கிறிஸ்தவர்களும் செப்துவஜிந்திலிருந்து படித்திருக்கிறார்கள். இது ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. அது என்னவெனில், ஒரு வேதப்பகுதியானது சரியான மொழியாக்கம் செய்யப்பட வேண்டுமெனில் அந்த வாக்கியமானது தேவன் தம்முடைய மக்களுக்கும் உலகத்திற்கும் பேசினதாக காணப்பட வேண்டும். எப்படியாயினும், இந்த கண்ணோட்டமானது எந்த ஒரு தற்கால அல்லது பண்டைய மொழியாக்கங்களில் மொழியாக்க நடை முறையில் தெய்வீக அகவுணர்வை உரிமைகோருவதில்லை! ஒரு ஒட்டுமொத்தமாக

தொகுப்பிடும் ஒரு வாக்கியத்தில் இவை அனைத்தையும் அமைவு ஏற்படுத்துவோமாக: “இறுதியான சத்தியம் ஒன்றிருக்கிறது.”

அப்போஸ்தலர்கள் போதித்தவைகள் கிறிஸ்துவினுடைய போதனைகளோடு சேர்க்கப்படவில்லை; அது ஏற்கெனவே பரலோகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும், மேலும் கர்த்தரிடமிருந்து வந்ததாகவே கருதப்படவேண்டும். அனைத்து அப்போஸ்தல உபதேசங்களும் இயேசுவின் சொந்த உதட்டிலிருந்து கூறப்பட்டிருப்பது போன்றவைகளாகும் (மத். 10:19, 20, 40). ஷியுகோ மெக் கார்ட் அவர்கள் மத்தேயு 16:19ஐ இவ்வாறு மொழியாக்கம் செய்தார்: அப்போஸ்தலர்கள் இந்த பூமியில் எதைக் கட்டினார்களோ அவைகள் “பரலோகத்தில் ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டது.”[11] இது பழைய ஏற்பாட்டு எழுத்துக்களின் முக்கியத்துவத்தை எவ்வகையிலும் அழிப்பது இல்லை; ஏனெனில் தேவன் இந்த எழுத்துக்களைக் கொண்டு பேசுகிறார் என்ற சுட்டுதலோடு, பழைய ஏற்பாட்டின் மேற்கோள்களும், குறிப்புகளும் எபிரேயர் முழுவதும் சிதறிக்கிடக்கிறது.

கிறிஸ்துவின் வருகையைக் குறித்த சாடைக் குறிக்குறிப்புகள் ஆதியாகமம் 3:15; 12:1-3 மற்றும் 49:10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.[12] உபாகமம் 18:15ல் மோசேயை மாற்றீடு செய்ய ஒரு புதிய தீர்க்கதரிசி வருவதை அறிவித்தபோது இது மேலும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது (பேதுரு அப். 3:22ல் மேற்கோளிடுகிற ஒரு பகுதி). அதன் பின்னர் மேசியாவின் பணியும் பண்பும் இன்னும் தனிவகைப்படுத்தப்பட்டது. சங்கீதம் 22:14-18ல், சிலுவையிலறைப்படுதலைக் குறித்த சித்தரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 2:25-28ல் பேதுருவால் மேற்கோளிடப்பட்ட ஒரு தீர்க்கதரிசனம், சங்கீதம் 16:8-11ல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாக முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய முழு வெளிப்பாடும், அவருடைய இயல்பு, வல்லமை மற்றும் சித்தம் ஆகியவை இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே கற்றறியப்படக் கூடும் (யோவான் 10:30; 14:9; 17:3-8). எனவே தான் புதிய ஏற்பாடு ஒரு முறை முற்றிலும் நிறைவு பெற்றதும் எல்லா வெளிப்பாடுகளும் முடிவடைந்தது. கிறிஸ்து வந்தபோது, அவர் அப்போஸ்தலர்களுக்கு தேவனை வெளிப்படுத்தினார். கிறிஸ்து பரமேறினப் பின்னர், வெளிப்பாட்டை முழுமைப்படுத்தவும், அப்போஸ்தலர்களின் வார்த்தைகளை அற்புதங்களைக் கொண்டு உறுதிப்படுத்தவும் அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் (மாற்கு 16:20; யோவான் 16:12, 13; எபி. 2:1-4). இன்றைக்கும் தொடர்ச்சியான வெளிப்பாடுகள் அவசியமென கூறுதலானது, தேவன் இயேசுவைக் கொண்டு இறுதியாக பேசவில்லை என்பதாக சுட்டுகிறது!

அற்புதங்களும், இறுதியான வெளிப்பாடும் ஒன்றிணைந்துச் சென்று இறுதி நோக்கமாகிய இரட்சிப்பிற்கேதுவான விசுவாசத்திற்கு நேராக நடத்தவேண்டும் (மாற்கு 16:15-20; யோவான் 20:30, 31).

"வரபோகிற காலத்தின் வல்லமையை" (எபி. 6:5) ருசிப்பதினால், தொடக்கக்கால பரிசுத்தவான்கள் நமக்கு பெரும் வல்லமை கிடைக்கப் போகின்ற அந்த நித்திய "காலத்தில்" ஒரு வழியாக அரைப்பகுதி பங்கு பெற்றனர்.

இந்த பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் வேறுபாட்டை கவனிக்கவும்:[13]

| **பழைய ஏற்பாடு: தீர்க்கதரிசிகள்** | **புதிய ஏற்பாடு: கிறிஸ்து** |
|---|---|
| தேவனால் அழைக்கப்பட்ட மனிதர்கள் | தேவனுடைய குமாரன் |
| பல தீர்க்கதரிசிகள் | ஒரே குமாரன் |
| முழுமையற்ற கூறுகளடங்கியது முழுமையற்ற செய்தி | இறுதியான மற்றும் முழுமையான செய்தி |

தேவன் நம்முடன் தம்முடைய குமாரனைக் கொண்டு **திருவுளம்பற்றினார்**. "திருவுளம்" λαλέω (*லாலியோ)* பற்றினார் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தை எபிரெயரில் தெய்வீக வெளிப்பாடுகளுக்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது (2:2, 3; 3:5; 7:14; 9:19; 11:16; 12:24, 25). யூதா 3 ஆம் வசனமும் இதே கருத்தை குறிப்பிடுகிறது, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்."

தேவனுடைய நித்திய குமாரன் மூலமாகவே ஒருவர் இந்த உலக வாழ்வில் தேவனோடு நெருங்கி வாழ முடியும். குமரான் மூலமாக செல்வதே பிதாவிடம் செல்லும் வழியாக இருக்கிறது (யோவான் 14:1-6). பழைய ஏற்பாட்டில் பேசினவரும் தேவனே, மேலும் புதிய ஏற்பாட்டில் பேசுகிறவரும் அவரே. பவுலின் நிருபங்களில் கூறப்பட்டுள்ள "கர்த்தருடைய வார்த்தை" என்பது இயேசு முன்பு போதித்தவைகளை சார்ந்திருக்கிறது (1 தெச. 1:8; 4:15). "நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது" என்று சுட்டுவதும் "கர்த்தருடைய வார்த்தையாக" இருக்கிறது (1 கொரி. 7:10; 14:37ஐ காண்க).

யாத்திராகமம் 3:6ல் பதிவிடப்பட்டுள்ளப்படி தேவன் மோசேயோடு பேசினார் (மேலும் செப்துவஜிந்த்திலிருந்து இயேசு பின்னர் மேற்கோள் காட்டினதுபோன்று), மரித்தோர் எழுந்திருப்பதைப்பற்றி: *"நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருக்கிறேன்* என்று, தேவன் மோசேயின் ஆகமத்தில் அவனுக்குச் சொன்னதை, நீங்கள் வாசிக்கவில்லையா? அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார்" (வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன). ஒரு சரியான எபிரெய மொழிபெயர்ப்பின் மூலம் தேவன் முதல் நூற்றாண்டு

மக்களோடு பேசிக்கொண்டிருந்தார் என்று முடிவை இது சித்தரிக்கிறது.

தேவன் அவருடைய குமாரனின் மூலமாக மற்றும் அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்களுடைய கூட்டாளிகளின் ஏவப்பட்ட எழுத்துக்களின் மூலமாக அதே விதத்தில் இன்றும் பேசுகிறார். அவர்களுடைய வார்த்தையானது நம்மிடம் தகுதியான மொழியாக்கங்களுடன் பல வகையான மொழிபெயர்ப்புகளோடு வந்திருக்கிறது. இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் மூல மொழிபெயர்ப்பாகிய எபிரெய வேதத்திலிருந்து இல்லாமல், அதைப்போன்ற ஒரு மொழிபெயர்ப்பிலிருந்து (செப்துவஜிந்த்) மேற்கோள் காட்டியிருக்கின்றனர். உண்மையாகவே தேவன் வேத மொழிபெயர்ப்புகளிலிருந்து நம்மோடு இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறார்!

இயேசுவைக் குறித்த உச்ச உயர் கண்ணோட்டத்தை சீர்க்கெடுக்க எதையும் அனுமதித்துவிடக் கூடாது. தொடக்கக் கால கிறிஸ்தவர்கள் அவருடைய உட்கருத்தை காண்பதில் தோல்வியடையும் அபாயத்திலிருந்தனர், மேலும் நாம் நம்முடைய பார்வையில் இயேசுவை உயர்த்துகிற காரியத்தில் சந்தேகமாகிய மங்கலான மூடுபனி அல்லது அவிசுவாசம் ஆகியவற்றை அனுமதிக்கக் கூடாது.

இராபர்ட் மில்லிகன் அவர்கள் இயேசு கிறிஸ்து ஏன் தேவனுடைய குமாரனாக அழைக்கப்படவேண்டுமென்பதைக் குறித்து ஒரு நீண்ட விளக்கம் தருகிறார். (1) கன்னி மரியாளின் இயற்கைக்கு அப்பாற்பட்ட கருத்தரிப்பு மற்றும் பிறப்பு (லூக். 1:35); (2) பவுல் அப்போஸ்தலர் 13:33ல் கூறுகிறபடி மரித்தோரிலிருந்து அவருடைய உயிர்த்தெழுதல் (வெளி. 1:5ஐ காண்க); மற்றும் (3) அவர் நித்தியராக இருக்கிறபடியால் பிதாவினால் பிறந்திருக்கிறார்.[14] ஒருவேளை இயேசு பிதாவினால் ஆதியில் உருவாக்கப்பட்டவர் என்ற அறிவில் பார்த்தால், தேவன் அவரைக் கொண்டு எல்லாவற்றையும் உருவாக்கியிருக்க முடியாது (எபி. 1:2; யோவான் 1:1-3).

மில்லிகனின் கூற்றுப்படி, கிறிஸ்து தம்முடைய மனிதப்பிறப்பின்போது குமாரனானார், ஆனால் “வார்த்தையாக” இருந்தார் (யோவான் 1:1, 2) அவருடைய பிறப்பிற்கு முன்னர் பிதாவுடன் ஆதியிலேயிருந்தார். நாம் ஆபிரகாம் கல்தேயர் தேசத்தின் ஊர் பட்டணத்தை விட்டு புறப்பட்டபோது ஆபிராமாகவே இருந்தார், அதன் பின்னரே ஆபிரகாம் என அழைக்கப்பட்டார் என்று அறிந்திருக்கிறோம் ஆனால் “ஆபிரகாம் கல்தேயர் தேசத்தின் ஊர் பட்டணத்தை விட்டு புறப்பட்டாரென்று” கூறுவதுபோல ஒருவேளை அவருக்கு தேவகுமாரன் என்ற சொற்றொடரை அவர் நித்திய இயல்பில் இருந்ததுபோன்று நாம் பிரயோகிக்கக் கூடும், தேவனுடைய குமாரன் என்பது தற்சமயத்தில் அவருடைய தற்போதைய தெய்வீக இயல்பையும் மற்றும் முந்தைய சரீர மெய்மையையும் குறிப்பிடக் கூடும். மத்தேயு 4:3,

6ல் சாத்தான் அவருடன் பேசுகையில் இந்த மொழி நடையை தெளிவற்ற அவநம்பிக்கையுடன் பயன்படுத்தினான்; மத்தேயு 14:33ல் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை "தேவகுமாரன்" என்று போற்றுதலோடு குறிப்பிட்டனர். ரோமர் 1:4-ல் பவுல் இந்த தலைப்பை போற்றுதலோடு பயன்படுத்தியிருப்பதாக காணப்படுகிறது, ஆக இது பிதாவின் மகிமையோடு முழுமையாக ஒன்றிணைந்திருப்பதை பொருள்படுத்துகிறது. "தேவனுடைய குமாரன்" என்ற பெயர் இயேசுவின் ஒட்டுமொத்த இயல்பை சுட்டுகிறது.

தேவனை தம்முடைய பிதாவாக இயேசு சொன்னபோது, யூதர்கள் அவர் ஏறக்குறைய தேவனாக ஏற்படுத்துகிறார் என்று உரிமைகோரினார்கள் (யோவான் 10:33). ஒருவேளை இது தவறான உரிமைகோருதலாக இருந்தால், அவர் உண்மையில் மரணத்திற்கு பாத்திரவானாக இருந்தார். "தேவனுடைய குமாரனாக" கூறுவதின் பொருள் "தேவனோடு ஒன்றாக இருப்பதாக" கூறுவதாகும், இது பிதாவினுடைய தெய்வீகத்தில் முற்றிலும் ஒன்றிணைக்கப்பட்டிருப்பதை பரிந்துரைக்கிறது. அவர் "தேவனுடைய குமாரனாக" இருப்பதால் அவர் "அனைத்திற்கும் [சிருஷ்டிக்கும்] கர்த்தராக இருக்கிறார்" (அப். 10:36). சைமன் ஜெ. கிஸ்ட்மேக்கர் அவர்கள் இவ்வாறாக விமர்சிக்கிறார். வசனம் 2 எழுத்துப்பூர்வமான மொழியாக்கம் "ஒரு குமாரன்" என்று இருந்தாலும், "இந்த பெயர்ச்சொல்லானது வார்த்தையென்ற முற்றான அறிவில் மற்றும் பெயர் உரிச்சொல்லிற்கு சமமாக பயன்படுத்தப்பட்டுள்ளது."[15]

எபிரெய நிருபத்தின் முதல் மூன்று வசனங்கள் இந்த முழு புத்தகத்திற்கான ஆய்வுப்பொருளை அமைக்கிறது. ஒழுங்கு முறை, காலம், மற்றும் தேவனுடைய வெளிப்பாட்டின் தொடர்பாளர் ஆகிய அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.[16] வசனங்கள் 2 மற்றும் 3 ஆகியையவை கிறிஸ்துவின் தெய்வீக பண்புகளை விவரமாக எடுத்து கூறுகையில், வசனங்கள் 1 மற்றும் 2 ஆய்வுப்பொருளை சிறப்பிக்கிறது.

### தேவ குமாரனுடைய மகிமையின் இயல்புகள் (1:2, 3)

**2இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.**
**3இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.**

இந்த சுருக்கமான பகுதியில் ஏழு ஆச்சரியமான சொற்றொடர்கள்

கிறிஸ்துவின் தெய்வீக இயல்பையும் மகிமையையும் மொழிப்பாக்குகிறது. நாம் இவற்றை ஆராய்கையில் ஒவ்வொரு தெய்வீக பண்பும் அவரில் கொண்டிருக்கிற நம்முடைய தொடர்பை பொருள்படுத்துகிறதை கவனிக்கவேண்டும்.

**வசனம் 2. சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக** இயேசு பிரகடனப்படுத்தப்பட்டிருக் கிறார். இந்த சொற்றொடரானது ஒருவேளை "ஜாதிகள் உட்பட அனைத்தும் அவருக்கு வாக்குப்பண்ணப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ள சங்கீதம் 2:8ஐ எதிரொளிக்கக் கூடும். கிறிஸ்து தற்போது அனைத்தின் மேலும் பெரும் ஆட்சியாளராக இருக்கிறார் (கொலோ. 1:18; எபே. 1:22, 23). இதன் ஆசிரியர் எபிரெயர் 2:5-9ல் இந்த சத்தியத்தை இப்படியாக விளக்கி விரிவாக விவரிக்கிறார், "பிந்திய ஆதாமாகிய இயேசு சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்" "சகலத்தையும்" (πᾶς, *பாஸ்* என்ற வார்த்தையிலிருந்து πάντων, *பாண்டன்*) என்று குறிப்பிட்டார். இது ஒரு பரந்த மொழி நடையாக வெறும் மனித குலத்தை மட்டுமே பொருள்படுத்தக்கூடும் அல்லது இந்த உலகிலுள்ள மற்றும் பரலோகிலுள்ள அனைத்தையும் இணைக்கப்பெற்றிருக்கக் கூடும். "சகலத்தையும்" என்று கூறப்பட்டிருப்பதில் இக்காலத்து மீட்கப்பட்டவர்களும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே நாம் கிறிஸ்துவுடைய வர்கள், கிறிஸ்து தேவனுடையவர், மற்றும் கிறிஸ்துவினுடையவைகள் எல்லாம் நம்முடையவைகளாக இருக்கிறது (1 கொரி. 3:21-23). அவர் "சுதந்திரவாளியாக" இருக்கிறார், ஏனெனில் அவர் தேவனுடைய ஒரே பேறான "குமாரன்." நமக்கு கிறிஸ்து அப்பாற்பட்டு குமாரத்துவமும் கிடையாது, வாரிசுரிமையும் கிடையாது. மெய்யாகவே மீட்கப்பட்டவர்களுக்கு தேவன் வைத்திருக்கிற எண்ணுக்கடங்கா பொக்கிஷங்களின் திறந்த வாசலாக அவர் நிற்கிறார். இந்த மகிமையான சத்தியத்தை ஒருவரும் ஆழ்ந்து சிந்திக்க இயலாது மற்றும் ஆச்சரியத்தினாலும் மகிழ்ச்சியாலும் மலைத்து நிற்கவும் முடியாது.

இயேசு தற்போதைய நிலையை எப்போது அடைந்தாரென்று உறுதியாக நாம் குறிப்பிடமுடியாது, ஆனால் அவருக்கு "சகல அதிகாரமும்" கொடுக்கப்பட்டதாக (மத். 28:18) அவர் அறிவித்ததற்கு முன்னர் நிச்சயமாக அது நடந்திருக்கும். பிலிப்பியர் 2:5-9ல் பவுல் கிறிஸ்துவின் மேன்மையானது அவருடைய பாடு, மரணம், மற்றும் உயிர்த்தெழுதலின் விளைவாக பிரகடனப்படுத்தினார். இந்த வசனங்களில் நம்முடைய புரிதலுக்கு அப்பாற்பட்டு பல காரியங்கள் இருந்தாலும் தேவகுமாரனின் பெரும் மேன்மையின் உண்மையை நம்முடைய மனதில் நாம் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும்.

**இவரைக்கொண்டு** [கிறிஸ்து] **உலகங்களையும் உண்டாக்கினார்**

என்று இதன் ஆசிரியர் கூறுகிறார். உலகம் (αἰῶνας, *ஐயோனாஸ்*) என்ற பதமானது பன்மையில் காணப்பட்டாலும் இது NIV அல்லது மோஃப்ஃபாட் போன்ற மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதுபோன்று, ஒருவேளை "உலகம்" அல்லது "அண்டம்" என்று மொழியாக்கம் செய்யப்படக் கூடும்.

கிறிஸ்து சிருஷ்டிப்பில் பங்கு கொண்டார், மேலும் படைக்கப்பட்ட அனைத்தும் அவரையல்லாமல் படைக்கப்படவில்லை (யோவான் 1:1-3). அலெக்ஸாண்டிரியாவை சேர்ந்த ஆசாரியர் ஏரியஸ் (கி.பி. ஏறக்குறைய 250-336) அவர்கள் இயேசு படைக்கப்பட்டவர் என்று கூறினார். இவரை மறுக்கும் விதமாக கிரேக்க முற்பிதாவாகிய அத்தானசியஸ் (கி.பி. ஏறக்குறைய 293-373) அவர்கள் யோவான் முதலாம் அதிகாரத்திலிருந்து பதிலளித்தார்: இயேசுவானவர் அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டப் போது சம்பந்தப்பட்டிருக்கிறப்படியால், அவரே ஒரு சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியாக இருக்க முடியாது! யாராவது ஒருவர் இயேசு படைக்கப்பட்ட ஒரு பிரதான தூதுனாக இருந்தார் என்று கூறுவார்களென்றால் இதே காரணத்தை வைத்து அவர்களை மறுக்கலாம். பலர் இதை சந்தேகப்பட்டாலும், தேவத்துவத்தில் இயேசுவானவர் காணப்படுதல் ஆதியாகமம் 1:1, 26ல் கூறப்பட்டுள்ள தேவன் (אֱלֹהִים, *ஏலோஹிம்*) என்ற பன்மைச் சொல்லின் மூலம் சீர்மைப்படுத்தக்கூடும்.

ஒருவேளை சிருஷ்டிப்பில் வெளிப்பட்ட அதிச்சியூட்டும் வல்லமையை கற்பனை செய்யக்கூடுமெனில், நாம் தேவனை எந்த உணர்வுகளினாலும் கட்டுப்படுத்த இயலாது. ஒவ்வொரு அவிசுவாசியும் இதை துல்லியமாக செய்கின்றனர், ஏனெனில் அண்டசராசரத்தையும் அதிலுள்ளவைகள் அனைத்தையும் படைத்த மகாதேவனை அவர்கள் கருக்கொள்ள முடியாது. இயேசு அனைத்தையும் சிருஷ்டித்தார் என்பதை ஏற்றுக்கொள்வதில் எந்த பிரச்சனையும் இருக்கக் கூடாது. அவர்கள் கருந்துளைகள், தீடிரென்று ஒளியை பெருக்கி பின்னர் தன் நிலைக்கு வரும் நட்சத்திரங்கள் முன்னர் நட்சத்திரங்கள் அல்லது கோள்கள் என்றழைக்கப்பட்டவைகளைக் குறித்தும் கவலைப்பட அவசியமில்லை. புதிய தகவல் துணுக்குகள் தேவனை பெரும் வியப்போடு ஆராதிப்பதற்கும், போற்றுவதற்கும் காரணமாக இருக்க வேண்டும். ஏனெனில் நாம் தேவனுடைய வல்லமை, பராக்கிரமம், மற்றும் ஞானத்தைக் குறித்து அதிகமாக கற்றுக்கொள்ளுகிறோம்.

ஒருவேளை புதிய கண்டுபிடிப்புகள் நம்முடைய விசுவாசத்தை அசைக்குமென்றால், நாம் நம் தேவனுடைய மேன்மை மற்றும் மகத்துவத்தைக் குறித்தும் அளவான கண்ணோட்டத்தைக் கொண்டிருப்பதின் காரணத்தினால் ஆகும். சிருஷ்டிகரை சான்றுப்படுத்தும் அதிர்ச்சியூட்டும் வல்லமை மற்றும் திறமை ஆகியவை நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அணுவிலும் சட்டப்பூர்வமாக

கிடைக்கப்பெறுகிறது. நம்முடைய தலையிலுள்ள மயிரியின் எண்ணிக்கையையும் அறிந்து, ஒரு மிகச்சிறிய காரியங்களிலும் கூட தம்முடைய பிள்ளைகளின் மேல் அக்கறைக் கொள்கிற தேவனாக இருக்கிறார் (லூக். 12:6, 7).

ஒருவேளை எஃப்.எஃப். புரூஸ் அவர்கள் கூறுவது சரியாக இருக்கக் கூடும்: "இவரைக் கொண்டு [கிறிஸ்து] உலகங்களையும் உண்டாக்கினார்" என்ற சொற்றொடரானது கிறிஸ்தவ ஞானப்பாட்டின் சுவடாகவோ அல்லது ஆதி சபையின் விசுவாச அறிக்கையாகவோ இருக்கக் கூடும் (காண்க யோவான் 1:3; கொலோ. 1:16).[17] வசனங்கள் 1-3 வரையுள்ள மொழியானது கிறிஸ்துவை போற்றுவதில் உயரத்தில் இருந்து, ஆதி சபையின் ஞானப்பாடல்களில் ஒலிக்கும் ஓசைகளாக இணைக்கப்பட்டது.

**வசனம் 3. அவருடைய மகிமையின் பிரகாசமென்று** குமாரன் கூறப்பட்டுள்ளார். நாம் இங்கு கிறிஸ்துவின் மேன்மையை காண்கிறோம், அதில் அவர் பிதாவின் மகிமையை பிரதிபலிக்கிறார். பிரகாசமானது "ஒளிர்தல்" (ἀπαύγασμα, *அபவுகாஸ்மா*) அல்லது தேவனுடைய மகிமையை பிரதிபலித்தல் என்று பொருள்படக்கூடும் (RSV). எருசலேம் மொழிபெயர்ப்பானது "தேவனுடைய மகிமையின் பிரகாசமான வெளிச்சம் மற்றும் அவருடைய இயல்பின் துல்லியமான நகல் என்று கூறுகிறது." எப்படியாயினும் அவர் தேவனுடைய மகிமையை பிரதிபலிப்பதை சந்திரன் சூரியனின் ஒளியை பிரதிப்பலிக்கும் விதத்தில் கூறுவது தவறானதாகும். ஒரு நேரடியான ஒளிர்தலே சிறப்பான விவரிப்பாக இருக்கும்.

"மகிமையின் பிரகாசம்" என்ற சொற்றொடர் அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும் (கொலோ. 1:15) மற்றும் தேவனுடைய ரூபமாயிருந்தும் (பிலி. 2:6) என்ற வார்த்தைகளில் இணையை காண்கிறது. தேவனுடைய மகிமையானது பழைய ஏற்பாட்டில் குருடாக்கும் வெளிச்சமாக இருக்கிறது (யாத். 34:29-35). இந்த பிரகாசமானது மறுரூபமலையில் இயேசு காட்சியில் நினைவூட்டுவதாக இருக்கிறது (மத். 17:2; மாற்கு 9:2, 3; லூக். 9:29), அந்த நொடிப் பொழுதில் அவர் *ஷெகினாவால்* ஒளிர்ந்தார் (எழுத்துப்பூர்வமாக "வாசமாக இருத்தல்") அதாவது, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மகிமை விவரிக்கப்பட்டிருப்பது போன்றதாகும். அந்த மகிமையின் காட்சியானது அப்போஸ்தலர்களை இன்னமும் மோசேக்கு செவிகொடுக்க வேண்டியது இல்லை, மாறாக இயேசுவை அவர்களின் இறுதியான அதிகாரமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று என்று சமாதானப்படுத்தியது. தேவன் அவருடைய "இவருக்கு செவிகொடுங்கள்" என்று வாக்கியத்தை அந்த சத்தியத்தை வலுவாக்கும்படி சேர்த்தார்.

இங்கு விவரிக்கப்பட்டிருக்கிற மகிமையானது தேவத்துவத்தின்

முழுமையானது கிறிஸ்துவில் வாசம் செய்வதை சித்தரிப்பதாகும் (கொலோ. 2:9). இயேசு உண்மையான இயல்பானது தேவத்துவத்திலுள்ளதைப் போன்றதாகும்.

கிறிஸ்துவின் இயல்பை தவறாக புரிந்துக் கொள்ளுதலானது சுவிசேஷத்தை தரக்குறைவாக மதிப்பிடுதலாக இருந்தது, எனவே நான்காவது நூற்றாண்டில் அவருடைய தெய்வீகத்தைக் குறித்து விவாதித்து நிரூபிப்பது அவசியமாக இருந்தது. ஒருவேளை கிறிஸ்துவைக் குறித்த தவறான கருத்துக்கோணம் கொண்டு மற்றும் தேவனுடைய சாரமாக கருதாமல் வெறும் தெய்வீகத்தின் வெளிப்பாடாக மட்டும் கருதினால் நம்முடைய ஒட்டுமொத்த வாழ்வும் தவறானதாக இருக்கும். இந்த சொற்றொடரானது யோவானின் “அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது” என்ற பிரகடனத்திற்கு இணையாக இருக்கிறது (யோவான் 1:1).

தேவன் தம்முடைய விருப்பத்தை எப்படி தொடர்புப்படுத்துகிறார் என்பதை காட்டினபிறகு, இதன் ஆசிரியர் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய மகிமையின் மீதான வலியுறுத்தலோடு பின்தொடருகிறார். முதல் நூற்றாண்டில் இந்த சத்தியமானது ஏன் முக்கியமானதாக இருந்தது? யூதர்கள் தேவாலயத்தின் அழகை மகிமைப்படுத்தி, தேவனுடைய பிரசன்னத்தின் வெளிப்பாடு தங்களோடு இருப்பதாக கருதினார்கள். வெகு சீக்கிரத்தில் அழிக்கப்படப்போகிற (கி.பி. 70) தேவாலயத்தின் மகிமையை விட கிறிஸ்துவின் மகிமை அப்பாற்பட்டது என்பதை யூத கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டியதாக இருந்தது.

**அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து.** ஒரு நாணயத்தின் மேலிருக்கும் ஒரு உருவம் அது உருவாகக்கப்பட்டிருக்கிற அச்சுவிலிருக்கிற வடிவத்தை தொடர்புபடுத்துவது போன்று, தேவனுடைய குமாரன் “அவருடைய இயல்பின் முத்திரையை பெற்றிருக்கிறார்” (RSV). “ரூபம்” (χαρακτήρ, *காரக்டர்*) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு, இனவிருத்தியை துல்லியமாக குறிக்கிறது. ஆனால் இது ஆங்கிலத்தில் சொல்லப்படும் கேரக்டர் என்ற பொருளை தருவதில்லை. வேறொரு இடத்தில் இயேசுவானவர் தேவனுடைய (தற்சொரூபம்) *எய்கோன்* என்று அழைக்கப்படுகிறார் (2 கொரி. 4:4; கொலோ. 1:15). மனிதன் 1 கொரி. 11:7ல் “தேவனுடைய ரூபமாக *எய்கோன்* அழைக்கப்படுகிறான்,” காரக்டர் என்பது மிகச்சரியான நகலை குறிப்பிடுகிறது, ஆனால் எய்கோன் பண்புகளை மட்டுமே பிரதிநிதியாக குறிக்கிறது. இயேசுவானவர் பிதாவின் அனைத்து பண்புகளையும் பெற்றிருக்கிறார். பண்டைய காலத்து எழுத்தாளர் மோப்சுய்டியாவின் தியோடர் (கி.பி. 350-428) அவர்கள் இவ்வாறு கூறினார்: “அந்த வார்த்தை தேவனாக இருந்தது” (யோவான் 1:1) என்ற வசனமானது

"அவர் அவருடைய பண்புகளின் மிகச்சரியான பிரதிநிதித்துவமாக இருக்கிறார்."[19]

இந்த மொழியின்படி, இயேசுவானவர் "ஒரு நகலாக" இருக்கிறார், ஆனால் இது உண்மையானதை விட ஏதோ வேறான ஒன்று என்ற அர்த்தத்தை கொடுக்காது. கிறிஸ்சோஸ்டம் என்பவர் மனித மொழியானது மாட்சி நிறைந்த சத்தியங்களை துல்லியமாக குறிப்பிட போதாதபடியால் இந்த பதமே பயன்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறதென்று விவரித்தார்.[20] நாம் மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகளை உண்மையான செய்திகளை விட்டு மீறி தவறான முடிவிற்கு வேறு எங்கேயோ கொண்டு செல்ல அனுமதித்துவிடக் கூடாது! கிறிஸ்துவானவர் பிதாவிடம் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பால், படைக்கப்பட்ட எதையும் விட அல்லது தேவதூதனை விட மேலானவராக இருக்கிறார். பிதாவை விட வேறுபட்ட நபராக இருந்தாலும், அவர் தெய்வீகமானவர், மற்றும் தேவனுடைய அதே சாரமாக இருக்கிறார் (யோவான் 10:30; 17:20, 21).[21] துர்உபதேசக்காரர்கள் அவர்கள் பண்டைய காலத்தவர்களானாலும் சரி அல்லது தற்காலத்தவர்களானாலும் சரி இயேசுவை ஒரு சாதாரண மனிதனாக அல்லது ஒரு பிரதான தூதனாக குறிப்பிடுகின்றனர், அவர்கள் எபிரெய நிருபத்தின் ஒட்டுமொத்த அர்த்தத்தையும் தவறவிடுகிறார்கள். இயேசு பிதாவின் இயல்பை பெற்றிருக்கிறார்: இது அதிர்ச்சியூட்டுகிறதாக இருக்கிறது, ஆனால் இது வேத வாக்கியங்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட சத்தியமாக இருக்கிறது! இந்த வெளிப்பாடானது இயேசு கிறிஸ்துவைக் குறித்த மாபெரிய மற்றும் மிகவும் ஆழ்ந்த பிரகடனமாக இருக்கிறது. "ஆளத்துவம்" அல்லது "பண்பு" (ὑπόστασις, *யுப்பொடசிஸ்*) என்பது ஒருவரின் இருத்தல் அல்லது சாரமாகும். இந்தப் பகுதி கேள்விக்கு இடமில்லாமல் இயேசு தேவனைப் போன்றே அதே பண்புகளை உடையவராக இருக்கிறார் என்ற கருத்துக்கோணத்தை ஆதரிக்கிறது.

அடுத்ததாக **சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்** என்று இதன் ஆசிரியர் கூறினார். இதே எண்ணம் கொலோசெயர் 1:17 லும் காணப்படுகிறது: "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது." இது தெய்வீக ஒதுக்கீட்டின் பணியை குறிப்பிடும் விவரிப்பாக இருக்கிறது. ஒட்டுமொத்த சிருஷ்டிகளும் அவருடைய வார்த்தையால் (ῥῆμα, *ரேமா*) படைக்கப்பட்டிருக்க, அவருடைய பாதுகாக்கிற வல்லமையாகிய அவருடைய வார்த்தையினால் நீடித்து நிலைநிறுத்தப்படுகிறது. அவரால் அனைத்தும் படைக்கப்பட்டதுப் போல அவரையல்லாமல் எதுவும் நிலைநிற்க முடியாது.

இங்கு மேற்கோளிடப்பட்டுள்ள சொற்றொடரானது, உலகத்தின் நன்மைக்காக அவர் ஒழுங்கை நிலைநிறுத்துகிறார் என்று

அர்த்தங்கொள்ளக் கூடும். “அனைத்தையும்” என்ற சொல்லானது தேவதூதர்கள், மனிதர், சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது (காண்க ஆதி. 1:14-19). இது இயேசு உலகத்தை ஒழுங்காக நிலைநிறுத்தச் செய்து தினந்தோறும் எதோ ஒரு அற்புதத்தை செய்கிறார் அல்லது ஒரு வார்த்தையைக் கூறுகிறார் என்ற அர்த்தத்தை தருகிறதா? இல்லை, அவர் சாதாரணமாக ஒரு பொருள் முறை ஒரு இடத்தில் அமைத்து அது ஒழுங்கான முறையில் இயங்கச் செய்திருக்கிறார். ஆதியிலேயே இயேசு ஒழுங்கு முறையை மாற்றுவதற்காக தம்முடைய வார்த்தையை பேசியிருக்கிறபடியால் சூரியன் தினந்தோறும் காலையில் உதிக்கிறது. நாம் இதை பொதுவான தெய்வீக ஒதுக்கீடு என்கிறோம்.

தேவனுடைய பேசப்பட்ட வார்த்தையானது ஒன்றுமில்லாததிலிருந்து உலகங்களை உருவாக்கியது (எபி. 11:3). இயேசுவானவர் “ஒரு காரியத்தை அவைகள் நியமிக்கப்பட்ட திட்டத்திற்கு நேராக கொண்டு செல்கிறவராக” இருக்கிறார்.[22] கோள்களை அவருடைய வல்லமையுள்ள, அதிகாரமுள்ள, மற்றும் தாக்கமுள்ள வார்த்தையால் அவைகளுடைய வட்டப்பாதைகளில் வைத்திருக்கிறார். தேவனை படைப்பாளியாக நோக்கும் கருத்துக் கோணமானது பழைய ஏற்பாட்டு யூதர்களுக்கு நன்கு அறியப்பட்டிருந்தது (காண்க ஏசாயா 40:21, 22). இந்த எண்ணங்களில் நாம் வாழ்ந்து தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமையையும், அவருடைய தெய்வீக ஒதுக்கீட்டையும் முற்றிலும் விசுவாசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**தம்மாலேதாமே** [கிறிஸ்து] **நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி.** NIV வேதாகமம் “பாவத்தை சுத்திகரிக்க ஒதுக்கீடு செய்தவர்” என்று கூறுகிறது. இந்த சாதாரண வெளிப்பாட்டில் சுவிசேஷத்தின் மையப்பொருள் காணப்படுகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒழுக்க சுத்திகரிப்பானது பலியின் மூலமாக மட்டுமே செய்யப்பட்டது (எபி. 9:22). நம்முடைய பாவத்தை மன்னிக்கும் வழியை இயேசு தம்முடைய சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம் வழங்கினார் (1 யோவான் 1:7). “உண்டுபண்ணி” (ποιησάμενος, *பொய்சமெனோஸ்*, என்பது ποιέω, *பொய்யோ*) என்பதிலிருந்து வந்தது. வினை பெயரெச்சமாக இருந்து, இது கடந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டதாக காட்டுகிறது. இது கிறிஸ்துவின் மீட்பின் பணி நிறைவு பெற்றதாக வலியுறுத்துகிறது. இதுவே எபிரெயரின் முக்கிய குறிப்பாக இருக்கிறது.

இயேசு வெறும் ஒழுக்க சீர்திருத்தலை மட்டும் போதிப்பதற்கோ அல்லது முன்மாதிரியாக இருப்பதற்கோ அல்லது இரத்த சாட்சியாக இருப்பதற்கோ வரவில்லை. அவர் பாவத்தை நீக்கி நாம் நித்திய ஜீவனை பெறும்படிக்கு வந்தார். எப்படியாயினும், இங்கு காணப்படும்

சத்தியமானது என்னவென்றால், பாவத்தை சுத்திகரிக்க தேவனுடைய குமாரன் யாரும் செய்து முடிக்காத ஒன்றை செய்து நிறைவேற்றியிருக்கிறார். ஒரு பிரதான ஆசாரியன் செய்யக் கூடாததை அவர் செய்து இருக்கிறார், ஏனெனில் ஆசாரியனுடைய செயல்கள் ஒரு வருடத்திற்கு மட்டுமே தண்டனையை குறைக்க முயன்றது. இதற்கு மாறுப்பட்டு இயேசு நம்முடைய பாவங்களுக்கான முழுமையான மன்னிப்பை எல்லா காலத்திற்கும் பெற்றுத் தந்தார். அவர் நமக்காக பரிந்து பேசுவதற்காக என்றும் ஜீவித்து இரட்சிப்பின் பணியை தொடர்கிறார் (எபி. 7:25).

குமாரன் நம்முடைய மீட்பர். நம்முடைய பாவத்திற்கான சுத்திகரிப்பை நிறைவேற்றினபின்னர், தேவனுடைய **வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்**. இயேசு ஸ்தேவானுக்கு சிங்காசனத்தில் வலது பாரிசத்தில் அமர்ந்தவராக காட்சியளித்தார் (அப். 7:56)! எபிரெயர் வலியுறுத்துகிற கிறிஸ்து "உட்கார்ந்தார்" என்பது அவருடைய இரட்சிப்பின் பணி முடிந்துவிட்டதை காட்டுகிறது, ஆக அவர் தம்மை தொடர்ச்சியான பலியாக இருக்கிறார் என்ற எவ்வகையான உபதேசத்தையும் இது புறந்தள்ளுகிறது.

இங்கு இந்த குறிப்பானது சங்கீதம் 110:1 லிருந்து செய்யப்பட்டுள்ளது, இதுவே எபிரெயரில் அடிக்கடி மேற்கோளிடப்படுகிற திறவுகோல் வசனமாக இருக்கிறது (1:13; 8:1; 10:12, 13; 12:2). எபிரெயர் 10:11 ஆரோனின் வழி வந்த ஆசாரியர்கள் நிற்பதற்கும் கிறிஸ்து உட்கார்ந்திருப்பதற்கும் வேறுபடுத்துகிறது. யூத ஆசாரியர்களுக்கு உட்காருவதற்கு எந்த வசதியும் செய்யப்படவில்லை ஆசாரிப்பு கூடாரத்தில் எந்த நாற்காலியும் கிடையாது. ஒரு முயன்று பெறுகிற இரட்சிப்பிற்காக யூத ஆசாரியர்கள் தொடர்ச்சியாக பணிபுரிய வேண்டியதாக இருந்தது. இதற்கு மாறுபட்டு அவருடைய மீட்பின் பணியானது சிலுவையில் அனைவருக்கும் ஒரேதரமாக நடப்பித்து நம்முடைய இரட்சிப்பை கொண்டு வந்தது!

சங்கீதம் 110 ஆனது தாவீதின் வீட்டிலிருந்த ஒரு இளவரசருக்கு உரையாற்றப்பட்டது. தாவீது தாமே உள்ளே சென்று யெகோவாவின் முன் அமர்ந்ததுப் போன்று (2 சாமு. 7:18),[23] தாவீதின் வீட்டார் தெய்வீக பிரசன்னத்தில் உட்காருதலானது வெளிப்படையாகவே அவர்களுடைய முன்னுரிமையாக இருந்தது. இந்த சங்கீதமானது இயேசுவின் மேசியாத்துவத்தை விளக்க ஆதி சபைக்கு மிகவும் சாதகமான சான்றாக சித்திரிக்கப்பட்டது (காண்க மாற்கு 12:37; அப். 2:34; 1 கொரி. 15:25; எபே. 1:20). அவருடைய பணியானது நிறைவு பெற்றதாக மட்டும் இவ்வசனமானது கூறாமல் அவர் ஓய்வில் இருப்பதாக கூறுகிறது, ஆனால் அவர் உட்கார்ந்திருக்கையில் தேவனோடு கூட அரசாட்சி செய்கிறார் (அப். 2:33-36). அவர் ஒரு "பிரபு மற்றும் இரட்சகர்" (அப். 5:31) மேலும் அவருடைய பிதாவுடன் அவர் சிங்காசனத்தில்

அமர்ந்திருக்கிறார்!

## தேவ குமாரனாகிய கிறிஸ்து தேவதூதர்களை விட மேலானவர் (1:4-14)

**1:4-7**

**4இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். 5எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? 6மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார். 7தேவதூதரைக்குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது.**

வசனம் 4 மற்றும் 5ல் தேவதூதர்களை தொடர்புபடுத்தி இயேசுவின் மேலான நிலையையும் தன்மையையும் பேசினார். ஒருவரும் கிறிஸ்துவத்தை விட்டு பின் திரும்பி விடக்கூடாது என்பதே அவருடைய குறிப்பாக இருந்தது, ஏனெனில் கிறிஸ்துவானவர் தேவதூதர்களை விடவும் தீர்க்கதரிசிகளைவிடவும் மேலானவராக இருக்கிறார். மூன்று சத்தியங்களின் வரியில் அவர் இந்த முரண்பாட்டை விவரிக்கிறார் (1) கிறிஸ்து என்னவாக மாறினார், (2) அவர் யார் மற்றும் (3) அவருடைய கனத்தின் ஸ்தானம்.

“தேவதூதர்களை விட இயேசு பெரியவர் என்ற விவாதம் ஏன்?” என்று ஒருவேளை நாம் கேட்கக் கூடும். பிற்கால யூத மதத்தில் அவர்கள் மிகவும் உயர்த்தப்பட்ட ஜீவிகளாகவும்[24] மேலும் பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் மிகாவேல் ஊழியம் செய்கிற ஆசாரியனாகவும்[25] எண்ணப்பட்டனர். இந்த ஆவிக்குரிய தேவையாகிய ஊழியமானது பெரும் தேவதூதர்களால் நடத்தப்பட்டதாக விசுவாசித்தனர்.

தேவதூதர்களைப் பற்றிய குழப்பமானது சவக்கடல் சுருளோடு இருந்த ஏவுதலற்ற கைப்பிரதிகள் மேசியாவைப் பற்றி இரண்டு காட்சிகளில் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் ஒன்று என்னவெனில் ஒரு இராஜரீகமான ஆளத்துவமுடையவர், இவருடைய ஆட்சியானது இவருடைய ஆசாரிய பணிகளுக்கு துணையாக இருக்கும். இரு காட்சிகளும் பிரதான தேவதூதர்களுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. அதாவது வேறு வார்த்தைகளில்

கூறுவதென்றால் “எதிர் வரும் உலகத்தில்” தேவதூத ஜீவிகளே ஆளுகிறவர்களாக இருப்பார்கள் என்பதே இதன் போதனையாக இருக்கிறது.[26]

தேவதூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதில் பங்கு பெற்றதால், அவர்கள் யூதர்களின் மத்தியில் பெரும் நன்மதிப்பிற்குரியவர்களாக இடம் பெற்றனர். ஆக தேவதூத ஜீவிகளைப் பற்றிய இந்த சத்தியங்கள் இதன் ஆசிரியர் வழங்குகிற விவாதத்திற்கு போதுமான அவசியத்தை தருகிறது.

**வசனம் 4.** இந்த வசனமானது அவர் என்னவாக மாறினார் என்ற காரணத்தைக் கூறி கிறிஸ்து தேவதூதர்களை விட மேலானவர் என்று கூறுகிறது: **இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.** “மேன்மை கொடுக்கப்பட்டது” என்பதை விட “மேன்மையுள்ளவரானர்” என்று கூறுவதே சரியான மொழியாக்கமாக இருக்கும். ஏனெனில் மேன்மை கொடுக்கப்பட்டது என்பது யோவானின் சாட்சியாகிய அவர் தேவத்துவத்தின் இரண்டாம் நபர் மற்றும் “அனைத்தும்” அவரால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை முரண்படுத்தும் (யோவான் 1:3). ஒருவேளை மேன்மை கொடுக்கப்பட்டது என்ற மொழியாக்கம் பயன்படுத்தப்பட்டிருக்குமெனில், இது அவருடைய மனிதத்தன்மையை மட்டும் குறிப்பிடக் கூடும். தெய்வீக, நித்திய குமாரனாகிய இயேசு மனிதனானார்.

இயேசு என்னும் மேன்மையான பெயர் அவருடைய கீழ்ப்படிதலினாலும், மகிமையடைதலினாலும் வந்தது (பிலி. 2:8-11). அவர் என்னவாக இருக்கிறார் மற்றும் என்ன செய்தார் என்ற காரணத்தினால் அவர் “குமாரன்” என்ற பெயரைப் பெற்றார், இது தூதர்களை சித்தரிக்க பயன்படுத்தப்பட்ட எந்த வார்த்தையை விட சிறந்ததாகும்.

குமாரானானவர் தேவதூதரை விட பெரும் சுதந்திரத்தையும், பாக்கியத்தையும் மற்றும் அதிகாரத்தையும பெற்றிருக்கிறார். தேவனுடைய தூதர்கள் அவருடைய சிருஷ்டிப்பின் எல்லைக்குள் வெறும் ஊழியக்காரர்களாக அல்லது பணிவிடைக்காரர்களாக இருக்கிறார்கள். RSV மொழிபெயர்த்தது போன்று “மேன்மை” (κρεῖττων, *க்ரெய்ட்டொன்*) என்பது “உயரிய”என்றும் பொருள்தரக்கூடும். “அவ்வளவு அதிகமாய்” (τοσοῦτος, *டொசௌடொஸ்*), என்ற பொருள் தரும் வார்த்தையும், “மேன்மை” என்று பொருள் தரும் *“க்ரெய்ட்டொன்”* வார்த்தையும் குமாரனில் நிலையை விவரிக்கிறது. இந்த சிலவற்றை விட மேன்மையானது என்ற எண்ணமானது எபிரெய நிருபத்தில் பல்வேறு வடிவங்களில் 13 மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (பன்னிரெண்டு வசனங்களில்: 1:4; 6:9; 7:7 [“பெரிய”], 19, 22; 8:6; 9:23;

10:34; 11:16, 35, 40; 12:24).

ஒருவேளை சிலர் இயேசு "தேவ குமரான்" என்ற அறிவை, ஒரு சாதாரண தேவதூதனாக மட்டுமே எண்ணக்கூடும் (காண்க யோபு 1:6; 2:1; 38:7). இதற்கு மாறாக இதன் ஆசிரியர் இயேசுவானவர் தேவதூதர்களை விட உயர்ந்தவர் என்று காட்டி, அவர் தேவனோடு கொண்டுள்ள நெருக்கத்தின் ஸ்தானத்தை வைத்து சித்தரிக்கிறார். முதலில் இயேசுவின் பண்புகளை குறித்த சரியான கண்ணோட்டமில்லாமல் இதன் வாசகர்கள் தங்கள் உபத்திரவத்தின் பிரச்சனைகளையும், விசுவாச குறைவுகளையும் ஒருபோதும் சந்திக்க இயலாது என்ற இதன் ஆசிரியர் வலியுறுத்தினார்.

அவருடைய மனித உருவெடுத்தலுக்கு முன்னர், இயேசுவானவர் "லோகோஸ்" (λόγος). என்று அழைக்கப்பட்டார். குறைந்தபட்சம் இந்த வார்த்தை அவருக்கு யோவான் 1:1, 14ல் செயல்படுத்தப்பட்டுள்ளது. அநேகமாக இதன் மேல் ஒத்தத் தன்மையானது அற்பமாக காணப்படுகிறது, தேவனுடைய அறிவை கற்றறிந்த அனைத்து அறிவையும் பெற்ற ஒரு வார்த்தை இருக்கக் கூடுமெனில், அவரே - லோகோஸ் - அதை வெளிப்படுத்த கூடியவராக இருக்கிறார். ஆகவே இயேசுவானவர் தேவனுடைய உண்மையான வடிவமாக இருக்கிறார் (யோவான் 14:7-11). அவரைப் பற்றிய இந்த போதனையானது பவுல் அவரைக் குறித்து எபேசியர் 1:19-21 மற்றும் பிலிப்பியர் 2:9-11 ஆகியவற்றில் கூறினதற்கு முழு இசைவாக உள்ளது.

இதன் ஆசிரியர் உண்மையில் ஒரு அமைதியான விவாதத்தை செய்தார். அவர் சாராம்சமாக குமாரனைக் குறித்து "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் என்று கூறியிருக்கிறபடியாலும். இதற்கொத்தாற்போன்று தேவதூதர்கள் ஒருபோதும் கூறப்பட்டதில்லை, இந்த உண்மையானது தேவதூதர்கள் குமாரனை விட தரம் குறைந்தவர்கள் என்று சான்றிடுகிறது." ஒருவர் கீழ்கண்டவாறு யூகிக்கக் கூடாதென்று அவர் சுட்டுகிறார்: "தேவதூதர்களை குமாரன் என்று (இப்படி ஒரு சிறப்பான ஒரு உணர்வோடு) அழைக்கப்பட்டிருக்காவிட்டாலும் குமாரன் என்று தொடர்ந்து கூறலாம் ஏனெனில் அப்படி செய்வதைப்பற்றியோ அல்லது அதற்கெதிராகவோ எதுவும் சொல்லப்படவில்லை." இல்லை, இந்த நிருபமானது நம்மீது கீழ்காணும் சட்டத்தை சுமத்துகிறது: சத்தியத்திற்கு எதிராக முடிவுறும் எந்த அனுமானத்தையும் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது.

**வசனம் 5.** அவர் யாராக இருக்கிறார் என்பதே தேவதூதரை விட பெரியவர் என்று எபிரெயரில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டாவது சத்தியமாகும் **எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில்**

**யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?**

நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் என்று கூறப்பட்டுள்ள மேற்கோள் சங்கீதம் 2:7 லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோளிடப்பட்ட எழு மேற்கோளில் முதலாவதாக இருக்கிறது. இந்த குறிப்பிட்ட சங்கீதமானது ஒருவேளை வெளிப்படுத்தின விசேஷம் 12:5 மற்றும் 19:15ல் கூறப்பட்டுள்ள இயேசுவிற்கும் வெளிப்படுத்தின விசேஷம் 2:27ல் கூறப்பட்டுள்ள அவருடன் இராஜ்ஜியத்தில் அவருடன் ஆட்சி செய்கிறவர்களுக்கும் நடைமுறைப்படுத்தக் கூடும்.

ஒருவேளை யூதர்கள் சங்கீதம் 2:7 ஆனது ஒரு விசேஷ தேவதூதருக்கு பொருந்தக் கூடியது என்று எண்ணியிருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக ஒரு ரபீயிடம் "தேவன் யாரை தம்முடைய குமாரனாக கூறக்கூடுமென்று" வினவப்பட்டால் அவர் ஒருவேளை இப்படியாக பதிலளிக்கக் கூடும், "வெளிப்படையாகவே தேவன் ஒரு வலிமையான தேவதூதனை உரைக்கிறார், ஏனெனில் தேவதூதர்கள் அடிக்கடி குமாரர்கள் என்று கூறப்பட்டிருக்கிறார்கள்" (யோபு 1:6; 2:1; 38:7). எப்படியாயினும் எபிரெய நிருபம் இந்த வசனங்களில் அந்த கருத்துக் கோணத்தை மறுத்தும் கிறிஸ்துவை ஒரு தேவதூத ஜீவி அல்ல அவர் குமாரன் என்றும் கூறுகிறது. இரண்டு நிகழ்வுகளில் இயேசுவானவர் குமாரனென்று பிதாவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார் (மத். 3:17; 17:5). தேவதூதனொருவரை தேவன் "குமாரனாக" உரைத்தார் என்று உரிமைகோர முடியாது என்று எபிரெயரின் ஆசிரியர் கூறினார்.

சங்கீதம் 2:7-ன் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் மனித அவதாரத்தைக் குறிப்பிடாமல் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் மனித பிறப்பைவிட கல்லறையிலிருந்து பரலோக இராஜ்ஜியத்தின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்ட நிகழ்வு வசனங்களில் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் மரியாள் மூலம் பிறந்த செயல் உயர்ந்த கவனத்தை ஈர்க்கவில்லை, ஆனால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததையே ஈர்த்தது. உண்மையில் அவர் வல்லமையுள்ள தேவகுமாரனாக உயிர்த்தெழுதல் மூலமாக பலமாக ரூபிக்கப்பட்டார் (ரோமர் 1:4).

"நான் அவருடைய பிதாவாக இருப்பேன்" என்ற வாக்கியமானது 2 சாமுவேல் 7:14 லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பிதா குமாரன் உறவானது, சிருஷ்டிகர் தேவதூதர்கள் ஆகிய உறவை விட மிகவும் நெருக்கமானதாகும்.

2 சாமுவேலில் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் உண்மையில் தாவீது அல்லது சாலொமோனை சுட்டுகிறதுபோன்று காணப்படுகிறது, ஆனால் தேவன் கிறிஸ்துவையும் குறிப்பிடுகிறார் என்று எபிரெயரில் ஒரு இரட்டை மேற்கோள் சுட்டப்பட்டிருக்கிறது. அநேகமாக இந்த தீர்க்கதரிசனத்தை சிறந்த வழியில் இப்படியாக விளக்கலாம்:

வரலாற்றுபூர்வமாக இந்த வார்த்தைகள் ஒருவேளை பகுதியாக தாவீது அல்லது முதல் தேவாலய கட்டடத்தை கட்டி முடித்த தாவீதின் குமாரனாகிய சாலொமோன் மூலமாக நிறைவேறியிருக்கக் கூடும். எப்படியாயினும் தாவீதின் மாபெரும் குமாரன் வரும்வரை முழுமையான நிறைவேறுதல் வரவில்லை.[27]

பழைய ஏற்பாட்டு உருவகம் மற்றும் குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் ஆகிய இருவகையான பல தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது. உருக நிறைவேறுதலான “என் குமாரனை எகிப்திலிருந்து அழைத்தேன்” (மத். 2:15 மற்றும் ஓசியா 11:1லிருந்து) என்பது இஸ்ரவேலர் ஒரு மக்கள் கூட்டமாக கிறிஸ்துவையோ அல்லது அவருடைய செயல்களையோ பிரதிபலிப்பதை காட்டுகிறது. ஆக பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் எதோ ஒரு வழியில் கிறிஸ்துவை ஒப்புவமைப்படுத்தினார்கள். அதேபோன்று, வனாந்திரத்தில் உயர்த்தப்பட்ட சர்ப்பமானது சவுக்கியத்தைக் கொண்டுவந்தது, ஆனால் கிறிஸ்து சிலுவையில் தூக்கப்பட்டதையும் அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது (யோவான் 3:14). வனாந்திரத்தில் இஸ்ரவேலுக்கு தண்ணீர் மற்றும் உணவு ஒதுக்கீடு செய்யப்பட்டது இயேசுவிற்கு ஒப்பாக இருக்கிறது (1 கொரி. 10:1-4) அடிக்கப்பட்ட ஒவ்வொரு பஸ்கா ஆட்டுக்குட்டியும் இயேசுவை சுட்டுகிறது (1 கொரி. 5:7). ஏசாயா 7:14 (“ஒரு கன்னிகை ஒரு குழந்தையோடிருப்பாள்”) ஏசாயா காலத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளைக் கொண்டிருந்தது, ஆனால் அதன் முழுமையான நிறைவேறுதல் மத்தேயு 1:21-23ல் குறிப்பிட்டுள்ளப்படி இயேசுவில் நடந்தது.

2 சாமுவேலின் 7:14-17 ன் இரண்டாம் பகுதி தாவீது மற்றும் சாலொமோனுக்கு கூறப்பட்டிருக்கிறது, ஆனால் இது சாலொமோனிலும் பெரியவராகிய இயேசுவுக்கும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தவறு செய்யும் போது மனிதனுடைய தடியால் அவரை தண்டிப்பேன் என்ற வாக்கியம் இயேசுவிற்கு குறிப்பிட்டுசொல்வதில் சிரமம் இருக்கிறது, ஏனெனில் அவர் பாவமற்றவர். தாவீது கிறிஸ்துவிற்கு ஒப்பாக இருக்கிறார், ஆனால் அவர் செய்த எல்லா காரியத்திலும் ஒப்பிட முடியாது. இந்த தீர்க்கதரிசனத்திலும் அப்படி தான் இருக்கிறது. எசேக்கியேல் 34:23, 24ல் தாவீதைக்குறித்து பேசுகையில் ஒரு மரித்த அந்த இராஜாவுடைய தனிப்பட்ட சந்ததியைப் பற்றி குறிப்பிடாமல், அவருடைய சந்ததியைக் குறித்து குறிப்பிடுகிறது. ஆக நிச்சயமாக குறிப்பிட்டிருப்பவர் கிறிஸ்துவாகிய மேசியாவாக தான் இருக்க வேண்டும். எபிரெயரின் ஆசிரியர் கூறும்போது இந்த வாக்குத்தத்தமானது தேவனுடைய குமாரனும் தாவீதின் வித்துமாகிய கிறிஸ்துவின் வருகையில் நிறைவேறுதலைக் கண்டதாகக் கூறுகிறார். சவக்கடலில் கண்டெடுக்கப்படட சுருள்களில் *மித்ராஸ்*[28] என்ற புத்தகத்திலிருந்த ஒரு

குறிப்பானது 2 சாமுவேல் 7:12-17 வரையுள்ள வசனத்தை மேசியாவை குறிக்கும் பகுதியாக கடைசிகாலத்தில் எழும்பப்போகிற “தாவீதின் கிளையோடு” தொடர்புடையதாக குறிப்பிடுகிறது.

இதன் ஆசிரியர் அசல் சூழலிற்கு ஒத்த பொருளை பார்க்காமல் ஏனோதானோ வென்று ஆதார வசனங்களைப் பார்க்கவில்லை. சி.ஹெச். டோட் அவர்கள் “புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் அனைத்தும் நடைமுறையில் துண்டு துண்டுகளாக பிரித்து அல்லாமல், மிகவும் முழுப்பகுதிபோன்று இருக்கிறது. ஆக இதன் ஆசிரியர்கள் ஒரு தனிப்பட்ட சூழலில் எடுக்காமல் அவர்களுடைய மிகச்சரியான மேற்கோள்களுக்கு மூலாதாரமாக ஒட்டுமொத்த சூழலில் எடுத்தனர்” என்று காட்டினார்.[29] ஆர்.வி.ஜி டாஸ்கர் அவர்கள் இவ்வாறு கூறினார்: எபிரெய ஆசிரியர் வசனங்களை மேற்கோளிட பயன்படுத்தின முறையைக் குறித்து விமர்சிப்பவர்கள், நியாயமில்லாமல் தாக்கியிருக்கின்றனர்:

> தீர்க்கதரிசனம் சொல்லத் தூண்டிய துல்லியமான வரலாற்று சூழல்களை தேடும் வேத அறிஞர்கள் இதை அறிந்திருக்க வேண்டும். “தெய்வீக வெளிப்பாடானது அவைகள் முதலில் கொடுக்கப்பட்ட சூழல்களால் முற்றிலும் நிபந்தனைக்குட் பட்டதுமல்ல, அதனுடைய முக்கியத்துவம் அது மனிதன் முதலில் உரைக்க கொடுக்கப்பட்டபோது இருந்த சரித்திர சூழலோடு வரையறுக்கப்பட்டது அல்ல, ஆனால் இது அதற்கு அப்பாற்பட்ட பரந்த மேற்கோள்களாகும்.”[30]

இந்த கருத்து பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் மொத்த தொடர்பையும் பாதிக்கிறது:

> பழைய புதிய ஏற்பாட்டு உறவை வெற்றிகரமாக விளக்க முயற்சித்ததில் எபிரெய நிருபம் மிகவும் முந்தி நிற்கிறது. இந்த புத்தகத்தின் பெரும் பகுதியின் மதிப்பானது விளக்கவுரை முறையில் காணப்படுகிறது, இது முன்னர் அவமதிப்போடு தள்ளப்பட்டது.[31]

சர வாக்கியங்களின் பயன்பாடானது ஆதி சபையில் ஒப்புவமை பழக்கமாக இருந்தது. இதன் ஆசிரியர் யூத கோணத்தை மறுக்க ஒரு புதிய பகுதியை அறிமுகப்படுத்தி அதன்பின்னர் அது இயேசுவிற்கு எப்படி பொருந்துகிறதென காட்டுவார். இதனுடைய எடுத்துக்காட்டு அப்போஸ்தலர் 2:25-28, 33-36; 13:34-37. ஆக எபிரெயர் 1:5-13, ஏழு பழைய ஏற்பாட்டு மேற்கோள்களோடு, வேத வாக்கியங்களை சரியாக செயல்முறைப்படுத்துவதை விளக்குகிறது.

**வசனம் 6. அவர் கூறுகிறார்** என்ற அறிமுகமானது சாதாரணமாக தேவன் இந்த சத்தியத்தை பிரகடனப்படுத்துகிறார் என்று பொருள்படுத்துகிறது! தேவன் தாமே வசனங்களைக் கொண்டு பேசுகிறார். இந்த வாக்கியமானது இதன் ஆசிரியருடைய வேத வசனங்களின் தெய்வீக அகவுணர்வின் நுண்ணறிவைக் கொடுக்கிறது.

இதன் ஆசிரியர் இந்தப் பகுதிகளை தெய்வீக அதிகாரம் வாய்ந்தவைகளாக அங்கீகரித்து மேற்கோளிடுகிறார்.

இந்த வசனத்திலிருக்கிற மேற்கோளானது சங்கீதம் 97:7 ஆக கருதப்படுகிறது; இது செப்துவஜிந்த்திலுள்ள உபாகமம் 32:43 உடன் நெருக்கமாக பொருந்துகிறது. இதன் வடிவம் சவக்கடல் சுருள்களிலும் காணப்படுகிறது.[32] உபாகமம் 32:43 ரோமர் 15:10 லும் மேற்கோளிடப்பட்டுள்ளது. அங்கே பவுல் எபிரெயரில் கூறப்படுள்ள அறிமுகத்தைப் போன்று துல்லியமாக "அவர் கூறுகிறார்" என்று வழங்கினார்.[33] இது ஒருவேளை பவுல் தான் எழுத்தாசிரியர் என்பதற்கு குறிப்பாக, அல்லது இது ஒரு பொதுவான உச்சரிப்பின் பயன்படுத்தலாக இருக்கக் கூடுமோ?

கொலோசெயர் 1:15, 18ல் இயேசு **முதற்பேறானவராக** πρωτότοκος, *ப்ரோடோடோகோஸ்* அழைக்கப்படுகிறார். அந்த வசனங்களில் "முதற்பேறானவர்" என்றால் "மரித்தவர்களில் முதற்பேறானவர்" என்று பொருளாகும், மேலும் ஒருவேளை அந்த பொருளையே இங்கு பெற்றிருக்கக் கூடும். இயேசுவானவர் ஒருபோதும் மரிக்கக் கூடாதவர் என்ற உணர்வில் இந்த சித்தரிப்பில் பொருந்துகிறார். லாசரு முன்பு உயிர்ப்பிக்கப்பட்டார், ஆனால் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் போது எழுப்பப்பட்டு எருசலேமிற்கு வந்தவர்கள்போன்று (மத். 27:52, 53), நிச்சயமாக மீண்டும் ஒருமுறை மரணத்திற்கு கீழ்ப்பட்டவராக இருந்தார் (யோவான் 11). இயேசு மரணத்தை ஜெயித்து அதன் மீதும் தமது உயரிய வல்லமையை செயல்முறை விளக்கப்படுத்தினார், மற்றும் "சாத்தானாகிய மரணத்தின் மீது வல்லமை பெற்றிருந்தார்" (2:14).

எப்படியாயினும் இந்த பட்டமானது அதை விட அதிகமாக இணைக்கப் பெற்றிருக்கக் கூடும் என்று காணப்படுகிறது. எஃப்.எஃப். புரூஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்: "அவர் 'முதற்பேறானவராக' அழைக்கப்படுகிறார், ஏனெனில் அவர் சிருஷ்டிப்பிற்கு எல்லாம் முந்தினவர், ஏனெனில் எல்லா சிருஷ்டிப்புகளும் அவருடைய சுதந்திரமாக இருக்கிறது."[34] இன்னொரு வேறுபாடு என்னவெனில் தேவதூதர்கள் படைக்கப்பட்டவர்கள். ஆனால் "முதற்பேறானவர்" "ஒரேபேறான குமாரன்."[35] சங்கீதம் 2 ன் மேசியாவை சார்ந்த பொருளானது அப்போஸ்தலர் 4:25, 26ல் வெளிப்படையாக இருக்கிறது, அங்கே சங்கீதத்தின் முதலிரண்டு வசனங்கள் மேற்கோளிடப்பட்டு இயேசுவானவர் "கிறிஸ்து" என்றும் "தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்றும் பயன்படுத்தப்படுகிறார்.

"முதற்பேறானவர்," "பரிசுத்தம்" அல்லது "கர்த்தருக்காக பரிசுத்தம்பண்ணப்பட்டவர்" என்ற விசேஷித்த பொருளைக் கொண்டிருக்கிறது, ஏனெனில் தேவனுடைய மக்களில் "முதற் பிறந்தவர்களுக்கு" இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது (யாத். 13:2; 22:29; எண். 3:12, 13). தாவீது முதற் பேறானவராக இல்லாதிருந்த போதும்

“முதற் பேறானவராக” ஏற்படுத்தப்பட்டார் (சங். 89:27). இந்த தலைப்பானது தரவரிசையில் ஒன்றாகவும், பிறப்பின் வரிசையில் அதிக மதிப்புடையதாகவும் இருக்கிறது.[36] “முதற்பேறானவர்” எனப்படுவது “முன்னுரிமை” அல்லது “உயர்வுமிக்கவர்” என்று குறிப்பிடக் கூடும்; வெளிப்படையாகவே இங்கு பின்னர் குறிப்பிட்டுள்ள பொருளையே இங்கு குறிக்கிறது. இந்த சொற்றொடரானது, மனித பிறப்பிற்கு பின் சென்று அவர் உலகத்திற்கு வந்தபோது தேவதூதர்கள் அவருக்கு அளித்த ஆராதனையை குறிப்பிடுகிறது (லூக். 2:13-15); ஆனால் அங்கு நடந்த ஆராதனையானது உன்னதத்திலுள்ள தேவனுக்கு மகிமை கொடுக்கப்பட்டது.

இந்த வசனத்தின் முற்பகுதியானது எதை பொருள்படுத்தினாலும், இங்கு முக்கியமான காரியம் என்னவென்றால் **தேவதூதர்கள்** கிறிஸ்துவை விட தரம் தாழ்ந்தவர்கள், அவர்கள் **அவரை தொழுதுகொள்ள** கட்டளைப் பெற்றவர்கள். தெய்வீகமானவர்கள் மட்டுமே ஆராதனையை சரியாக ஏற்றுக் கொள்ள முடியும்; தேவதூதர்களும் மனிதர்கள் அவர்களை தொழுது கொள்ளும்போது தடைச் செய்திருக்கின்றனர் (காண்க வெளி. 22:8, 9). சங்கீதம் 97:7ல் தேவதூதர்களுக்கு “தேவர்கள்” என்று பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் எந்த ஒரு தனி தேவதூதனோ “குமாரன்” என்று ஒருபோதும் சொல்லப்பட்டதில்லை.

எபிரெய நிருப எழுத்தாளர் இயேசுவிற்கும் மற்றும் தேவதூதர்களுக்கும் ஒரு வேறுபாட்டை காட்டினார். எபிரெயர் 1:4-6 ஏற்கெனவே இயேசுவானவர் என்னவாக மாறினார், அவர் யார் மற்றும் பிதாவிடம் அவர் கொண்டிருந்த உறவு ஆகியவற்றால் மேன்மையானவராக காட்டப்பட்டார். அடுத்த பகுதி 1:7-14 மற்ற வேறுபாட்டு பகுதிகளின் முக்கியத்துவத்தை சேர்த்திருக்கிறது.

**வசனம் 7.** சங்கீதம் 104:4-ன் வார்த்தைகளைக் கடனாகப் பெற்று, இயேசு தேவனுடைய ஒரேபேறானவராயிருக்க **தேவதூதர்கள்** வெறும் **ஊழியர்கள்** என்று இதன் ஆசிரியர் வலியுறுத்தினார். தேவதூதர்கள் படைக்கப்பட்டவர்களாக இருந்து, வழிதவறிப் போவதற்கும் மற்றும் தண்டனைத் தீர்ப்பிடுவதற்கும் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள் (2 பேதுரு 2:4), தேவன்; தேவதூதர்களை பல வழிகளில் பயன்படுத்தியிருக்கிறார் (பயன்படுத்துகிறார்), அவர்களை ஊழியர்களாக பணிபுரிய அனுப்புகிறார் அல்லது **அக்கினி ஜுவாலைப் போன்று** பயன்படுத்துகிறார்.

NASB மற்றும் NIV ஆகியவை தேவன் தமது தூதர்களை காற்றுகளாக ஏற்படுத்துகிறார் என்று கூறுகிறது, KJV மற்றும் NKJV ஆகியவை “ஆவி” என்ற வார்த்தையை பயன்படுத்துகிறது. *நியுமா* (πνεῦμα) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 375 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

காணப்படுபவைகளில் பெரும்பான்மையானவை "ஆவி" (பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஆவியானவர் அல்லது மனித ஆவி இவற்றை குறிப்பிட) என்றே மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

7 ஆம் வசனத்தில் *நியுமா* என்ற வார்த்தை "காற்று" என்று பல நம்பத்தகுந்த காரணங்களுக்காக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தொடக்கமாக, தேவன் தமது சித்தத்தை நிறைவேற்ற தூதர்களை பயன்படுத்துகிறார். அவர்கள் பலத்த காற்றுகளாக செல்வது மற்றும் மின்னல் ஒளிக்கீற்று போல அழிவை ஏற்படுத்துவது போன்ற பலமான வழிகளில் அவரை சேவிக்கிறார்கள். மேலும் "காற்று" என்ற வார்த்தையானது, தேவன் இயற்கையில் மூலக்கூறுகளை பயன்படுத்தி அவர் அப்படிச் செய்ய விரும்புகிறபோது மக்களை அழிக்கிறார். ஒருவேளை இதன் ஆசிரியர் *நியுமா* என்ற வார்த்தையை பயன்படுத்தி விவரித்து தேவதூதர்களின் பணிகளை மேலும் மர்மமாக்கியிருந்தால், நியுமா என்பதின் உள்ளார்ந்த சாத்திய கூறுகள் நம்மை வியப்பிற்குள்ளாக்கியிருக்கும்.

இந்த வசனத்திலுள்ள "ஆவி" என்ற வார்த்தையை மொழியாக்கம் செய்யும்போது கீழ்க்கண்ட வாதங்களை நாம் வைக்கக்கூடும்:

1. சூழல் அதை ஆதரிக்கிறது. கிறிஸ்து தேவதூதர்களை விட மேலானவர் என்று காட்டுவதே இதன் ஆசிரியரின் நோக்கமாக இருக்கிறது, மற்றும் இந்த உண்மையானது இந்த வார்த்தை "ஆவி" என்று மொழியாக்கம் செய்யப்படவேண்டுமென்பதை வலிவாக வாதம் செய்கிறது. தேவதூதர்கள் "பணிவிடை ஆவிகள்" என்பது தெளிவாக இருக்கிறது. 1:14 சாதாரணப்படுத்துவதுபோன்று அவர்கள் வெறும் "காற்றுகளல்ல."

2. நிலைத்தன்மை இதை வேண்டுகிறது. 1:7 யிலுள்ள வார்த்தையானது 1:14 விட வேறு பொருளில் இருக்க வேண்டுவதேன்?

3. தேவனுடைய கடந்த கால கிரியைகளின் சரித்திரம் அதை வலியுறுத்துகிறது. தேவதூதர்களின் ஊழியமானது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் அவர்கள் மூலமாக தேவன் சோதோம் கொமோரா பட்டணங்களின் மேல் அழிவைக் கொண்டு வந்தார் (ஆதி. 19:1-26). எகிப்தின் தலைச்சன்களை சங்காரம் செய்வதில் (யாத். 12:23), தேவன் தனிப்பட்டவராக கிரியைச் செய்யாமல் தூதர்களை பயன்படுத்துகிறார். நியாயப்பிரமாணத்தை கொடுப்பதில் ஈடுப்பட்டிருந்தனர் (அப். 7:53; எபி. 2:2). தாவீது மக்களை கணக்கெடுக்கையில் இஸ்ரவேலரை தண்டிப்பதில் அவர்கள் கருவியாக இருந்தனர் (2 சாமு. 24:15-17). சனகெரிப்பின் படைகளை தூக்கியெறிய தேவன் தம்முடைய தூதர்களை பயன்படுத்தினார் (2 இராஜா. 19:35). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்க, உயிர்த்தெழுதலை அறிவிக்க மற்றும் தொடக்கக்கால சபையின் வாழ்வில் மற்ற பல காரியங்களை

நிறைவேற்ற. தேவன் தூதர்களை பயன்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.

கேள்வியின் இரு பக்கங்களையும் கருத்தில் கொண்டு, நாம் *நியூமா* என்பதை “ஆவிகள்” என்று மொழிபெயர்ப்பதற்கு ஆதரவாக வலுவான ஆதாரங்கள் உள்ளதாகக் காண்கிறோம். எனினும், இந்த வார்த்தை “காற்று” என்று மொழிபெயர்க்கப்பட்டாலும், அத்தகைய ஒரு மொழிபெயர்ப்பு எழுத்தாளருடைய உறுதிமொழியின் அடிப்படை அர்த்தத்தை மாற்றாது. தேவன் தம்முடைய தூதர்களை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதையும் அந்த பயன்பாட்டை கிறிஸ்துவின் ஸ்தானத்திற்கு ஒப்பிட்டு அவர் தெளிவாகப் போதித்தார்.

சங்கீதம் 104-ல் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள், பிரத்தியேகமாக தேவனைக் குறிப்பிடுகின்றன. தேவனுடைய மகிமையையும், மகத்துவத்தையும் பற்றிக் குறிப்பிடுவதில். சங்கீதம் மிகவும் அடையாளப்பூர்வமாகவும் கவிதையாகவும். இருக்கிறது. தேவன் மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறவராகவும், ஒளியை வஸ்திரமாகத் தரித்திருக்கிறவராகவும் விவரிக்கப்படுகிறார். “தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார்” என்று சங்கீதக்காரன் எழுதினான். பழைய ஏற்பாட்டில் רוּחַ (*ருவாச்*) என்னும் சொல் மற்ற எல்லா மொழிபெயர்ப்புகளையும் போல “காற்றுகள்” என மொழிபெயர்க்கப்பட வேண்டும். சங்கீதம் இயற்கையின் உலகின் தன்மைகளைக் கொண்டு தேவனுடைய மகத்துவத்தைப் படம் பிடித்துக் காண்பிக்கிறது. “அக்கினி ஜுவாலைகள்” என்பது தேவனுடைய வல்லமைக்கும் மகத்துவத்திற்கும் அடையாள அர்த்தமான சொல் ஆகும். அவர் தம் எதிரிகள் மேல் அழிவையும் தீர்ப்புகளையும் வரப்பண்ணும் விதத்தை இந்த அடையாளம் சித்தரிக்கிறது. தேவனுடைய “அக்கினி வல்லமை” என்னும் அடிப்படை அர்த்தத்தைத் தெரிவிக்கிறது.

இந்த எழுத்தாளர் செப்துவஜிந்த்தின் மொழிபெயர்ப்பில் இருந்து சங்கீதத்தின் இந்த வரிகளை எடுத்து வசனம் 4-இல் தனது சொந்த நோக்கத்திற்காக இதைப் பயன்படுத்தினான். அவன் சங்கீதத்தின் வார்த்தைகளை உபயோகித்தான், ஆனால் ஒரு தனிப்பட்ட சூழ்நிலையைக் கொடுத்தான். ஒரு ஏவப்பட்ட எழுத்தாளனாக, அவனால் இதைச் செய்ய முடிந்தது. ஆபகூக் 2:4ஐ மேற்கோளிட்டுக் காண்பிக்கும்போது, ரோமர் 1:17-ல் பவுல் இதைச் செய்தான்.

செப்துவஜிந்த்தில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனத்தின் சரியான எண்ணத்தைத் தெரிவிப்பதற்கு, தேவனுடைய ஆவியானவர் எபிரெயர் எழுதிய எழுத்தாளரை எழுதச் செய்தார் என்பதை ஆர்.சி.எச். லென்ஸ்கி நம்பினார். “புதிய ஏற்பாட்டு வாசகர்களுக்காக எழுதப்பட வேண்டும் என்று அவன் விரும்பிய உண்மையான பொருளைத்

தெரிவிக்க … எழுத்தாளருக்கு ஆவியானவர் வழிகாட்டினார் … பழைய ஏற்பாடு கொண்டுள்ள வார்த்தைகளின் ஆழத்தின் நுட்பத்தை எபிரெயர் கொண்டுள்ளது"[38] என்று அவர் கூறினார். எனினும், அவருடைய பார்வை, இந்தச் சூழலில் சங்கீதம் கூறுகின்ற உண்மைகளுடன் பொருந்துவதாகத் தெரியவில்லை.

இயேசுவையும் தேவதூதர்களையும் ஒப்பிடுவதற்கு சங்கீதம் 104:4-ன் வார்த்தைகளை அந்த எழுத்தாளர் பின்பற்றியதை பரிசுத்த ஆவியானவர் கண்டு கொள்ளவில்லை என்பதுதான் சிறந்த பார்வையாகத் தெரிகிறது. அவர் செய்தது போலவே அந்த எழுத்தாளரையும், தேவனைப் பற்றி விவரித்த கிரேக்க மொழிபெயர்ப்பில் இருந்து மேற்கோள் ஒன்றை தெரிந்தெடுக்க வழிநடத்தினார். அவர் அந்த வரியை தனது நிருபத்தில் சேர்த்துக் கொண்டபோது, அந்த வரி ஏவப்பட்ட வேதவார்த்தையாக மாறியது.

**1:8-12**

**8குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. 9நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்தத் தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்; 10கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது; 11அவைகள் அழிந்துபோகும்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழைமையாய்ப்போகும்; 12ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது.**

**வசனம் 8. குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது**, என்று உரை தொடங்குகிறது. வசனங்கள் 8 மற்றும் 9ல், எழுத்தாளன் முதல் நூற்றாண்டில் ஒரு மேசியா சார்ந்த பொருள் கொண்டதாக யூத அறிஞர்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்டிருந்த சங்கீதம் 45-ன் வார்த்தைகளை எழுதினான்.[39] கிஸ்டேமேக்கர் வெளிப்படையாக, இந்த சூழலில் இருந்தும், எபிரெயர் 1 இன் பயன்பாட்டில் இருந்தும், மேலும் அத்தகைய எழுத்தாளர்கள் ஜஸ்டின் மார்டிர் மற்றும் ஐரீனியஸ் ஆகியோர் சங்கீதம் 45:6, 7-ஐ பல முறை மேற்கோள் காட்டியதிலிருந்தும், சங்கீதத்தின் வார்த்தைகளை இயேசு கிறிஸ்து நிறைவேற்றினார் என்று முதல் மற்றும் இரண்டாவது நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் கருதினார்கள் என்று கூறினார்,[40] ஒரு

அரச திருமணத்தைக் கொண்டாடுவதற்கு அறியப்படாத சங்கீதக்காரன் எழுதினான், மணமகனை பின்னர் மணமகளைக் குறிப்பிட்டழைத்து, அந்த அரசன் (ஒருவேளை ஒரு இளவரசன் அல்லது தாவீது வம்சாவழி ராஜா) தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவன் எனக் குறிப்பிட்டு அழைக்கப்பட்டான்; ஆனால் மொழிநடை, அதன் உயர்ந்த சிந்தனையுள்ள பொருளில், தாவீது ராஜாவின் சந்ததியாகிய! மேசியாவைக் குறிக்க வேண்டும்.

இந்தக் கூற்று "தேவன்" என்று அழைக்கப்படுகிற இயேசுவை விவரிக்கிறது (வசனம் 8). "ராஜாவை தேவன் என்று குறிப்பிட்டு அழைக்க மூல நோக்கமாக எபிரெயர் கொண்டிருந்ததா அல்லது இல்லையா என்பதை ஒருவர் உறுதிப்படுத்த முடியாது" என்று ஜேம்ஸ் தாம்சன் கூறினார்.[41] ஆன்கர் பைபிள் தொகுப்பில், ஜார்ஜ் வெஸ்லி புச்சனன் 1972 இல் மற்றும் க்ரேக் ஆர். க்யூஸ்டர் 2001 இல், ஆகிய இரண்டு ஆசிரியர்களும் இதில் வேறுபட்டார்கள். "குமாரன் அமரக்கூடிய தேவனுடைய நித்திய சிங்காசனம்" மற்றும் இயேசுவே தேவன் அல்ல என்று குறிப்பிட்டுள்ளதாக புச்சனன் நம்பினார்.[42] "மூலத்தில் இந்தப் பகுதி தேவனைக் குறித்து அழைக்கப்பட்டது, ஆனால் இப்போது குமாரனை 'தேவன்' என்று அழைக்கிற தேவன், பேசுகிறவர்"; 1:8-9-ல் மேற்கோள் காட்டப்பட்ட சங்கீதம், "தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட ஒருவர் 'தேவன்' என்று அழைக்கப்படலாம் என்று குறிப்பிடுகிறது. இயேசு அபிஷேகம் செய்யப்பட்டவர், அல்லது கிறிஸ்து என்றால், இந்த உரை அவரை 'தேவன்' என்று அழைக்கும் உத்தரவை அளிக்கிறது" என்று மற்றவர் கூறினார்.[43] "கிறிஸ்துவின் தெய்வீகத்தை வெளிப்படுத்த" இது பயன்படுத்தப்பட்டதாக கிஸ்டேமேக்கர் நம்பினார்.[44] இயேசு தேவன் என்று கருத இது அனுமதித்து முறையாக செப்துவஜிந்த் ஐப் பின்பற்றுகிறது என்று எஃப்.எஃப். ப்ரூஸ் கூறினார்.[45] என்னுடைய தீர்ப்பில், இயேசு தேவன் என்று குறித்து அழைக்கப்படுவதால், இந்தப் பகுதியின் சூழல் தெளிவாக உள்ளது.

இயேசுவின் தெய்வீகம் என்ற இந்தக் கண்ணோட்டம் "வல்லமையுள்ள தேவன்" என்று அழைக்கப்பட்ட குழந்தையின் சித்தரிப்பு நாம் காண்கிற ஏசாயா 9:6-லும் கொடுக்கப்பட்டுள்ளது. "நமது நீதியாயிருக்கிற கர்த்தர் [யாஃவா]" என்று அழைக்கப்பட்டு "நீதியுள்ள கிளை" தாவீதுக்காக எழுப்பப்பட்டு ராஜாவாக அரசாளுவார் என்று எரேமியா முன்னறிவித்தான் (எரே. 23:5, 6).[46] தேவனுடைய குமாரன், "தேவனாகவும்" இருக்கிறார் - அவர் தேவ உருவமாக, தெய்வீகமான ஒருவராக, மற்றும் பிதாவைப்போல் அதே சாராம்சத்தில் உள்ளார் என்பது மிகவும் தெளிவாக்கப்பட்டது. மூன்று நிலைகளில் ஒரே சாரம் கொண்ட ஒரே தேவனாக இருக்கிறார்.

புதிய உலக மொழிபெயர்ப்பு இந்த வசனத்தைக் குறிக்க "தேவனே, உம்முடைய சிங்காசனம்" என்பதைப் பயன்படுத்துகிறது, ஆனால் அந்த

மொழிபெயர்ப்பு ஆதரிப்பாக இருக்க முடியாது. “தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது.” என்பது சரியான மொழிபெயர்ப்பாகும். பெரும்பாலான அறிஞர்கள் - NASB, KJV, ASV, RSV மற்றும் NEB ஆகியவற்றை மொழிபெயர்த்தவர்கள் உட்பட - “தேவனே, உம்முடைய சிங்காசனம்” என்பது ஒரு அழைப்பாக இருக்க வேண்டும் என்று உடன்படுகின்றனர். மேலும், இந்த மொழிபெயர்ப்பு 2 சாமுவேல் 7:16 இல் தாவீதிடம் நாத்தான் கூறிய வார்த்தைகளை ஒத்திருக்கிறது. இராஜாவிற்கான இந்த சொற்களின் பயன்பாடு தனித்துவமானதல்ல, தனிச்சிறப்புடன் இந்தக் குறிப்பில் தாவீதின் வம்சா வழியில், ஏனென்றால் இராஜா மக்களுக்கான தேவனுடைய பிரதிநிதி.

மேசியாவின் ஆட்சி இறுதி உயிர்த்தெழுதலில் முடிவுக்கு வரும் என்று முதலாம் கொரிந்தியர் 15:24 போதிக்கிறது. உண்மையில், இரட்சிக்கப்பட்டவர்கள் பிதாவிடம் ஒப்படைக்கப்படும் போது மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் ஆட்சி முடிவுக்கு வரும், ஆனால் அவர் தேவனோடு என்றென்றும் அரசாளுவார் (லூக். 1:33; 2 பேதுரு 1:11; தானி. 7:14). அவர் மத்தியஸ்தராக வருவதற்கு முன்பு அவர் தேவனுடன் வைத்திருந்த அதே அதிகாரத்தை அவர் பெறுவார்.

**நீதியுள்ள செங்கோல்** என்பது ஒரு அரசனின் பணியாளனுக்கு அவனது அதிகாரத்தைக் காட்டுகிற ஒரு குறியீடாகும். ஊழியர்களிடம் ஒரு கட்டளையின் தாக்கத்தைக் கொண்டுவருகிற கையாலான சைகை (எஸ்தர் 4:11). இந்த சொற்றொடரின் வலியுறுத்தல், நீதியின் மீது மேசியாவின் செயல்பாடாகும்.

***வசனம் 9. நீர் நீதியை விரும்பி***, என்று அந்த எழுத்தாளன் கூறினான். யாரும் அதற்கு மேலான நீதியுடன் ஆட்சி செய்ய அல்லது கிறிஸ்துவை விட நீதியை நேசிக்க முடியாது. வேறு எந்த ராஜ்யமும் அவ்வாறு ஆட்சி செய்யப்படுகிறதா? பொதுவாக, அரசர்களில் சிறந்தவர்களும் கூட அவர்களுக்கு மிகவும் முழுமையான அதிகாரம் நீண்ட காலம் வழங்கப்பட்டிருக்குமானால், சர்வாதிகாரிகளாக மாறி விடுகிறார்கள். கிறிஸ்துவின் ஆட்சி எப்போதும் நியாயமானதாகவும் நேர்மையானதாகவுமாக இருக்கிறது. அவர் “நீதியை விரும்பி” அந்தக் கொள்கையை எல்லா காரியங்களிலும் பின்பற்றினார் (காண்க 1 பேதுரு 2:21-23).

**ஆதலால், தேவனே, … உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்.** பண்டிகை சந்தர்ப்பங்களில் அல்லது ஒரு ராஜாவின் முடிசூட்டு விழாவில் அபிஷேகம் செய்தல் என்பது பூர்வீக உலகில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அபிஷேகம் செய்வதில் எண்ணெயின் பயன்பாடு ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி அல்லது அழைத்தலின் பொதுவான மகிழ்ச்சியைக் காண்பித்தது. அரசர்கள், போதகர்கள், மற்றும் தீர்க்கதரிசிகள் தங்கள் அலுவல்களின்

பரிசுத்தத்தின் அறிகுறியாக எண்ணெயால் அபிஷேகம் செய்யப்பட்டார்கள். உதாரணமாக, ஆரோன் (லேவி. 8:12), ஆரோனின் குமாரர்கள் (எண். 3:3), சவுல் (1 சாமு. 10:1) ஆகியோரிடம் காணப்படுகிறது.

இயேசுவின் அபிஷேகம் பரலோகத்திலிருக்கிற பிதாவிடம் திரும்பிய சமயத்தில், அவர் மகிமை அடைந்த போதும் அவர் சபையின் தலைவராக பரலோக ராஜ்யத்தின் ராஜாவான போதும் நடந்தது. இயேசுவின் புனைப்பெயரான "கிறிஸ்து" என்பது இயேசுவின் பெயராக இருந்து "அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்" என்று பொருள் தந்து கிரேக்கச் சொல்லாகிய "மேசியா" என்பதற்கு இணையாக உள்ளது (காண்க சங். 2:2). கிறிஸ்து பரலோகத்தில் மகிமையில் தேவனுடன் திரும்பியபோது அவருக்கு அளித்த மகிமையைவிட அதிகமாக வேறு எவரும் பெற்றதும் இல்லை, பெறப்போவதும் இல்லை.

**உமது தோழரைப்பார்க்கிலும்** என்பது "உமது தோழரைவிட அதிகமாக" என்று NKJV இல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சொற்றொடர் கிறிஸ்து தேவதூதர்களுக்கும் மேலானவர் என்று அர்த்தப்படுத்துகிறதா? தேவதூதர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவிற்கு மிகவும் தாழ்ந்தவர்கள், ஆனால் அவர்கள் அவரது "தோழர்" (KJV) என்று அழைக்கப்பட முடியுமா? 2:10-ல் "அநேகம் பிள்ளைகள்" என்பது முதற்பேரான குமாரன் அவருடைய "சகோதரர்கள்" (2:11) என்று அழைக்கப்பட வெட்கப்படாத மீட்கப்பட்டவர்களாவர். 3:14-ல் மீட்கப்பட்டவர்கள் மேசியாவினுடையவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் μέτοχοι (*மெடொச்சோய்*, "பங்குள்ளவர்கள்"), இது "தோழர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையாகும். எனினும், இந்தச் சூழலில், இயேசு நித்திய குமாரனாகவும் தேவதூதர்கள் சிருஷ்டிகளாக இருந்தாலும், அவர்கள்தான் தோழர்களாக இருக்க வேண்டும்.

**வசனங்கள் 10-12.** இந்த வசனங்களில் சங்கீதம் 102:25-27 மேற்கோளிடப்பட்டுள்ளது. இந்த சங்கீதம் வழக்கமாக கர்த்தருக்கு எழுதப்பட்டிருப்பதாக புரிந்து கொள்ளப்படுகிறது. எனினும் எபிரெயரில் உள்ள மேற்கோள்கள் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளின் வெளிப்படையான நினைவூட்டுதலைக் கொடுக்கிறது, நிறுவனங்கள் அடிக்கடி தங்களுக்கு அப்பால் சுட்டிக் காண்பிக்கின்றன. நசரேயனாகிய இயேசுவில் இறுதி நிறைவேறுதலுக்கு சங்கீதத்தில் எதுவும் இல்லை என்று கூறுவதால், ஒருவர் எபிரெயர் புத்தகத்தையும் அதனுடைய செல்வாக்கையும் முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும். எடுத்துக்காட்டுகள், வகைகள், தீர்க்கதரிசன நிறைவேற்றங்கள், மற்றும் சொற்றொடர்கள் மூலம் புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாட்டின் பயன்பாடு இடைவிடாமல் இரண்டு ஏற்பாடுகளையும் இணைக்கிறது. சங்கீதம் 102 தேவனைப் புகழ்ந்து தேவனுடைய மக்கள் மீது அவருடைய

பாதுகாப்பிற்காக அவரை ஸ்தோத்தரிக்கும்போது, அந்த எழுத்தாளருடைய கிறிஸ்துவிற்கான பயன்பாடு, அந்த சங்கீதம் ஒரு மீட்பிற்கானதாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது.

பழைய ஏற்பாட்டில் யெகோவாவிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்ட சொற்கள் எந்தத் தயக்கமும் சந்தேகமும் இல்லாமல் சமமாக புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரேயர் 1:2, 3 அதிகாரங்கள் சிருஷ்டித்தலில் கிறிஸ்துவின் பங்களிப்பு பற்றிக் குறிப்பிடுகிறது. வசனங்கள் 10 முதல் 12, சங்கீதம் 102ஐ கிறிஸ்துவுக்குப் பயன்படுத்துவதால் அந்த சிந்தனை தொடர்கிறது.

நியமித்தபடியே, பிதாவைப் பற்றிக் கூறியவைகள் யாவும் குமாரனைப்பற்றியும் கூறப்படக்கடவது. நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பிதாவே, உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும் (யோவான் 17:4, 5). பிதாவானவர் தாமாகவே உலகரட்சகராக வரவில்லை. பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினார் (1 யோவான் 4:14). உலகத்தின் பாவத்தைக் கண்டித்து உணர்த்த தேற்றரவாளனை அனுப்பினார் (யோவான் 16:7, 8). முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ வாசகர்கள் இந்த சங்கீதத்தை கிறிஸ்துவுக்குப் பயன்படுத்துவதில் எந்தவித சிரமமும் கொண்டிருந்திருக்க மாட்டார்கள்.

சில அர்த்தத்தில், தேவன், கிறிஸ்து மற்றும் ஆவியானவர் ஒன்றாயிருக்கிறார்கள்; எனினும் இன்னும் அவர்களுக்கு வெவ்வேறு செயல்பாடுகளும் நோக்கங்களும் உள்ளன (யோவான் 10:30; 14:9-17). எனவே, பழைய ஏற்பாட்டின் சில சூழல்களில் பன்மை பெயரான “ஏலோகிம்” என்பதில் பிதாவும் குமாரனும் ஒன்றாக சேர்க்கப்பட்டிருக்க சாத்தியம் உள்ளது. சிருஷ்டித்தலின்போது தேவதூதர்கள் பார்வையாளர்களாக மட்டுமே இருந்தனர்; குமாரன் தேவனுடைய காரியஸ்தனாயிருந்தார் (எபி. 1:10). முந்தைய மேற்கோளில் “தேவனே” என்று அழைக்கப்பட்டிருந்தது, இது “கர்த்தாவே” என்று கொண்டுள்ளது.

அந்த உரை கூறுகிறது, **ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்** (வசனம் 12). ஒரு வஸ்திரத்தை உலுக்கப்பண்ணுகிறவராகிய கிறிஸ்து பூமியையும் உலுக்கப்பண்ணுவார். பூமி ஒரு சால்வையைப் போல எடுக்கப்பட்டு மடிக்கப்படும். “வஸ்திரம்” என்னும் வார்த்தை மத்தேயு 5:40 இலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் ஒரு கையற்ற மேல்சட்டை அல்லது சட்டையை மடிப்பதைவிட கிறிஸ்துவுக்கு பிரபஞ்சத்தை மடக்குவது கடினமானதாக இல்லை! கடவுள் எந்த நேரத்திலும் இந்த உலகத்தை முடிக்கலாம், இருப்பினும், இயேசு இருக்கிறார். அவருடன் இருப்பவர்களை அவர் கைவிடுவதில்லை (எபி. 13:5, 6). உலகம் மேலும்

ஒருமுறை அசைக்கப்படும் (அகிலம்) என்று எபிரெயர் 12:26 தெரிவிக்கிறது. நாம் ஒரு பகுதியாக உள்ள இயேசுவின் ராஜ்யம் அவ்வாறு அசைக்கப்படவும் அழிக்கப்படவும் முடியாது. இந்த கருத்து, தானியேல் 2 இல் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்ற தீர்க்கதரிசனமாக வெளிப்பபடுத்தப்பட்ட சொப்பனத்தை நமது நினைவிற்குக் கொண்டு வருகிறது (வசனங்கள் 44, 45).

"அவைகள் மாறிப்போம்" என்பது வானத்தையும் பூமியையும் குறிக்கிறது (மத். 24:35; 2 பேதுரு 3:10-13). அதற்கு மாறாக, கிறிஸ்து ஒருவரே அதே போல நித்திய நித்திய காலமாக நிலைத்திருப்பார் (எபி. 13:8).

இந்த பகுதியும் மற்றும் 2 பேதுரு 3-ம் பூமியின் அழிவைக் குறிக்கிறது. பஸ்கா (யாத். 12:11-14), ஓய்வுநாள் (லேவி. 24:8) ஆகிய இரண்டும் "என்றென்றும்" இருக்க வேண்டும். எனினும், "என்றென்றும்" (עוֹלָם, *ஓலாம்*) என்ற வார்த்தை, வெறுமனே ஏதாவது ஒன்று ஒரு குறிப்பிட்ட காலம் முழுவதும் இருக்கும் என்பதைக் குறிக்கிறது, இதனால் "என்றென்றும்" இருக்கும் அல்லது அந்த காலக்கட்டத்தில் முழுமையாக இருக்க வேண்டும்.

"பூமி என்றென்றும் நிற்கும்" என்று பிரசங்கி 1:4 கூறுகிறது. எனினும், சாலொமோன் பூமி நிலைத்திருக்கும் தன்மை உடையது என்று கூறுகிறான்; அவன் அது நித்திய தன்மை உடையதாய் இருக்கிறது என்று கூறவில்லை. பிரசங்கி அதனுடைய முழு சூழலையும் மனதில் கொண்டு வாசிக்கப்பட வேண்டும். இது பெரும்பாலும் அனைத்துப் பொருட்களையும் ஒரு பெரிய விஷயமாகவும், ஆவிக்குரிய அம்சங்களைக் கொண்ட வாழ்க்கை ஒன்றுக்கும் உதவாது என்றும் பார்க்கும் பொருளாசை உள்ளவர்களுக்கான விஷயங்களைக் கொண்டிருக்கும். வாழ்க்கையில் உள்ள எல்லாம் வீண் என்றோ அல்லது ஒரு "காற்றைப் பிடிக்க முயலுகிறோம்" என்றோ நினைக்கிறீர்களா? (உதாரணத்திற்கு பார்க்கவும், பிர. 1:14.) பிரசங்கி எழுத்தாளருக்கு, அவர் வெளிப்படையாக, மிகவும் நெருக்கமாக எண்ணிப்பார்க்கும் வரை, அவ்வாறு தோன்றியது. பின்பு ஆவிக்குரிய மற்றும் நித்தியத்தைக் கேள்வியில் சேர்த்து, பின்னர் அவனது இறுதி முடிவுகளை எட்டினான் (பிர. 12:13, 14-ஐ பார்க்கவும்.)

### 1:13, 14

**13மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா? 14இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு**

**அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?**

**வசனம் 13.** சங்கீதம் 110:1-ல் இருந்து இரண்டு காரியங்களை எழுத்தாளன் எழுப்பினான்:

1. இயேசு [பிதாவின்] **வலதுபாரிசத்தில் உட்காரக் கேட்டுக்** கொள்ளப்பட்டதாக. "வலதுபாரிசத்தில் உட்காருவது" என்பது மரியாதையைத் தெரிவிக்கிறது. இந்த வார்த்தைகள் இராஜா தம் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டு, ஊழியர்களால் சூழப்பட்டிருந்த ஒரு கற்பனை கிழக்கத்திய நீதிமன்றத்தை முன்வைக்கின்றன. மிகவும் மதிக்கப்படும் விருந்தினர்களுக்கு அந்தஸ்து கண்டுணரப்பட்டு, அத்தகைய நிலையில் "சாய்ந்து" (இதில் "அமர்வதைச்" சேர்க்கலாம்) அதனால் விருந்தளிப்பவரும் அவரது முதன்மை விருந்தினரும் எளிதாக உரையாட முடியும் விதமாக இது கிழக்கில் சாதாரணமாக உணவருந்தும் பழக்கமாக இருந்தது.

தேவதூதர்கள் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி ஒருபோதும் கூறப்படவில்லை. இயேசு மட்டுமே. மத்தேயு 22:41-46-ல் இயேசு தம்மைக்குறித்து குறிப்பிடுகையில் சங்கீதம் 110:1-ஐ பயன்படுத்தினார் (பார்க்க மாற்கு 12:36; லூக். 20:43). இது பெரும்பாலும் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்படும் சங்கீதங்களில் ஒன்றாகும். சங்கீதம் 110-ன் உத்வேகம் மற்றும் தாவீதின் ஆசிரியத்துவம் ஆகிய இரண்டையும் ஏற்றுக்கொண்டார் என்று (மத். 22:34-46-ல்) இயேசு காட்டினார்.

மேலும், இந்த மேற்கோளின் பயன்பாடு மூலம், "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி" என்று சங்கீதம் கூறுவதால் இரண்டு "கர்த்தர்கள்" என்று அவர் காட்டினார் (சங். 110:1). இந்த "இரண்டாவது கர்த்தர்" "தாவீதின் குமாரன்" (மேசியா) என்பதற்கான ஒரு குறிப்பாக இருந்தது என்று யூதத் தலைவர்கள் அப்போது உணர்ந்தார்கள். இந்த உண்மையைப் பற்றி யூத மதகுருக்களின் நிராகரிப்பு, இந்தச் சங்கீதம் நாசரேத்தின் கிறிஸ்துவில் நிறைவேறியது என்ற அப்போஸ்தலர்களின் போதனைக்குச் சாதாரண எதிர்வினைகள் இருந்தன என்பதைத் தெளிவாகக் காட்டியது. பெந்தெகொஸ்தே நாளன்று இயேசுவின் தெய்வீகத்தை நிரூபித்தபடி எபிரெயர் எழுத்தாளனால் கொடுக்கப்பட்டதைப் போல பேதுரு ஒரு வாதத்தைப் பயன்படுத்தினான் (அப். 2:34, 35). முதல் நூற்றாண்டில் அவருடைய தெய்வீகத்தை மறுதலித்தவர்களைப் போலவே இன்றைய தினத்தில் இயேசுவின் தெய்வீகத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறவர்களுக்கு சங்கீதம் 110ல் இரண்டு கர்த்தர்களின் விவாதம் அவ்வளவு ஒரு தடுமாற்றமாக இருக்கிறது.

மீண்டும், அமைதியில் இருந்து ஒரு வாதம் பயன்படுத்தப்படுகிறது. தேவதூதர்களை தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி எங்கும்

கூறப்படாததால், அவர்கள் எப்பொழுதாகிலும் அவ்வாறு செய்யலாம் என்று அதைக் கருத முடியாது என்று எழுத்தாளன் கூறினான். கிறிஸ்து எல்லா தேவதூதரையும்விட உயர்ந்தவர் என்று சொல்லப்படுகிறார். தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருப்பது, கிறிஸ்து கர்த்தத்துவத்தின் உயர்ந்த நிலைக்கும் அதிகாரத்திற்கும் உயர்த்தப்பட்டார் என்ற பொருளாகும். அவருக்கும், அவரது விமர்சகர்களுக்கும் இடையே பொதுவான விதத்தில் இந்த கற்பனை தெளிவாக இயேசுவால் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சங்கீதம் மேசியாவுக்குப் பயன்படுத்தினர் என்று அவரும் யூதர்களும் நம்பினார்கள். இந்தத் தீர்க்கதரிசனத்தை அவருக்கு அவராகவே பயன்படுத்திய அவருடைய கூற்று தவறானது என அவர்கள் நம்பினர், அது தெய்வ நிந்தனைக்கான அவர்களது குற்றச்சாட்டுக்குக் காரணமானது.[47]

2. **சத்துருக்களைப் பாதபடியாக** சங்கீதம் 110:1-ல் சித்தரித்தது இரண்டாவது ஆகும் (பார்க்க எபி. 10:13). இந்த சித்தரிப்பு, வெற்றி பெற்ற இராஜாக்கள் தாங்கள் வெற்றி பெற்ற எதிரியின் கழுத்தில் (அல்லது தலை) மீது தனது கால்களை வைப்பதற்கான பண்டைய பழக்கத்தை பிரதிபலிக்கிறது (யோசுவா 10:24).

**வசனம் 14. அவர்களெல்லாரும் … பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா** என்று ஆசிரியர் கேட்டார். இந்த வேலையில் இருந்து எந்த தேவதூதனும் ஓய்வாக இல்லை என்பதை "எல்லோரும்" என்பது குறிக்கிறது. அவர்கள் "உட்கார்ந்து" பார்க்கவில்லை! அவர்கள் கிறிஸ்து உலகத்தில் இருந்தபோது அவருக்கு உதவுவதில் முக்கியமாக ஈடுபட்டார்கள். மரியாள் மேசியாவின் தாயாக இருப்பார் என்று அவர்கள் மரியாளுக்கு அறிவித்தார்கள் (லூக். 1:26-38). இயேசுவின் பிறப்புக்காக அவர்கள் தேவனைப் புகழ்ந்தார்கள் (லூக். 2:13). அவர்கள் சோதனையின் முடிவில் அவர் தனக்குத் தானே உதவி செய்வதற்கு மிகவும் பலவீனமாக இருந்த அவருக்கு ஊழியம் செய்தார்கள் (மத். 4:11). ஒரு தேவதூதன் அவரை கெத்செமனே தோட்டத்தில் பலப்படுத்தினான் (லூக். 22:43). தேவதூதர்கள் அவருடைய உயிர்த்தெழுதலை அறிவித்து (யோவான் 20:12), அவர் திரும்ப வர இருப்பதற்கான உத்தரவாதத்தையும் கொடுத்தார்கள் (அப். 1:10, 11). அவர்கள் அவரது ஊழியர்களுக்கு உதவினார்கள், மற்றும் சிறைச்சாலையில் இருந்து தப்பிக்க பேதுருவுக்கு ஒருவன் உதவினான் (அப். 5:19). எப்போது, எங்கு போக வேண்டும் என்பதை பிலிப்புவுக்குக் கூறுவதன் மூலம் ஒருவன் அவனது நற்செய்திக்கு உதவியாக இருந்தான் (அப். 8:26).

"ஊழியஞ்செய்தல்" (λειτουργικός, *லைடோர்கிகாஸ்*) என்ற வார்த்தை "அடிமைகளாக பணியாற்றுதல்" என்ற பொருளில் அல்ல, ஆனால் "ஒரு சிறப்பு அலுவலகத்தில் அல்லது செயல்பாட்டில்

தேவனைச் சேவித்தல்." இவ்விதமான பணி, ஒரு ஆசாரியன் பலிபீடத்தண்டையில் நின்ற போது அவன் செய்த பணியாக இருந்தது. இந்த நிருபத்தின் எழுத்தாளனும் தேவதூதர்களின் முயற்சிகளுக்கு διακονία (*டயகோனியா*) என்ற இரண்டாவது பதத்தை உபயோகித்திருக்கிறான்: இது "சேவை" அளிக்கப்படுகிறது என்பதாகும்.

"ஊழியஞ்செய்தல்" என்பது "தேவனுக்கு சேவை செய்வதைத் தெரிவிக்கக்கூடும்" மற்றும் "சேவை" "மனிதர்களுக்குச் செய்யும் சேவையைக் குறிக்கலாம்." என்று தாமஸ் ஹெவிட் பரிந்துரைத்தார். எனினும், இது "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினி மித்தமாக … *டயகோனியா* தேவனுக்கான சேவையைக் குறிக்கிறது" என்பது இங்கே சந்தேகம் என்று அவர் ஒப்புக்கொண்டார்.[48] செப்துவஜிந்த்தில் "ஊழியம்" (*லைடோர்கிகா*) என்ற வார்த்தை வாசஸ்தலத்திலும் ஆலயத்திலும் பணியாற்றியவர்களில் பயன்படுத்தப்படுகிறது; இது இவ்வாறாக "தெய்வீக சேவையாகும்." மூலச் சொல் லட்டாயா "வழிபாடு" என்பதைக் குறிப்பிடுகிறது என்பது தேவையில்லை. "தெய்வீக சேவை" என்பது "வழிபாடு" ஆக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம் தேவன் கட்டளையிட்ட எந்த நடவடிக்கையையும், உள்ளடக்குகிறது.

இரண்டாவது நூற்றாண்டு யூத எழுத்துக்களில் தேவதூதர்கள் "ஆவிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.[49] தேவனுடைய செய்திகளை எடுத்துச்செல்வதில், தேவதூதர்கள் தானியேலுக்குச் சத்தியத்தை வெளிப்படுத்தினார்கள் (தானி. 9:21-23) மற்றும் பத்முவில் யோவானுக்கு (வெளி. 1:1; 5:2; 7:2; 10:9, 10; 11:1; 14:8, 9, 15, 18; 16:5-8; 17:7; 18:1-3; 19:17, 18; 22:6, 9-11). அவர்கள் யோவானுக்கு பல குறியீட்டுத் தரிசனங்களையும் செயல் விளக்கங்களையும் அளித்தனர். பழைய ஏற்பாட்டில், பத்து நீதிமான்களை அவர்கள் காணமுடிந்திருந்தால், அவர்கள் சோதோமைக் காப்பாற்றி இருந்திருப்பார்கள் (ஆதி. 18:32-19:15).

தேவதூதர்கள் குமாரனுடன் சமமாக இல்லை, மேலும் உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார முடியாது என்றாலும், **ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்பட** ஒரு ஊழியத்தின் நிமித்தம், **இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள்** - பரிசுத்தவான்களுக்குச் சேவை செய்ய முடியும். "வெளியே அனுப்பப்படுவது" என்பது οφ ἀποστέλλω (*அப்பாஸ்டலோ*) என்பதின் ஒரு மொழிபெயர்ப்பு, "அப்போஸ்தலன்" ἀπόστολος (*அப்போலோலோஸ்*) என்பதன் வினைச்சொல் வடிவம். அப்போஸ்தலர்கள் இரட்சிப்பின் செய்தியை வழங்குவதற்காக ஒரு பணியில் அனுப்பப்பட்டது போல அவர்களின் பணி இரட்சிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது ஆகும். அவர்கள் தேவனுடைய குமாரனல்ல, தேவனுடைய ஊழியக்காரர்களே.

பரிசுத்தவான்களுக்கு தேவதூதர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் நமக்கு செய்யும் பெரிய காரியங்களைப் பற்றி பிரமிப்புடன் நாம் ஆச்சரியப்படுகிறோம், இன்னும் நமது உதவியின் ஆதாரத்தை, அது நிகழும்போது நாம் அறியாமல் இருக்கிறோம். நாம் சபைக்குள் வந்தபோது, நாமும் நீதிமான்களுடைய மற்றும் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்ளுடைய பெரிய சேனைகளின் ஆவியின் பாகமாகவும் ஆகிவிட்டோம் (எபி. 12:22, 23). அவர் கைது செய்யப்படவிருந்த போது "பன்னிரண்டு லேகியோன்கள்" என்று இயேசு அழைக்க இருந்த (மத். 26:53) அவர்கள் மிகவும் ஏராளமாகவும் சேவை செய்யத் தயாராகவும் உள்ளனர். ஒரு "லேகியோன்" என்பவன் ரோமானிய படையின் 6,000 பேரின் முழு வலிமைக்குச் சமமானவனாக இருந்தால், இந்த மொத்த எண்ணிக்கை 72,000 தேவதூதர்களாக இருந்திருக்கும்; ஆனால் நமக்கு இன்னும் பல கிடைக்கிறது!

எனவே, இன்று அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு உதவுகிறார்கள் என்பதை அறிவதற்கு ஆச்சரியமாக இல்லை. அவர்கள் நமது இரட்சிப்பில் அதிகமான அக்கறை கொண்டுள்ளனர், அது நிகழும்போது மகிழ்ச்சியடைகிறார்கள் என்று நமக்குத் தெரியும் (லூக். 15:7, 10). நாம் எப்பொழுது இரட்சிக்கப்படுகிறோம், நாம் எப்பொழுது இழக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். காபிரியேலுடன், அவர்கள் நிச்சயமாக தேவனின் முன்னிலையில் நிற்கிறார்கள் (லூக். 1:19). அவரது சபையை உருவாக்கும் "சிறுபிள்ளைகள்" நலன்களைப் பற்றி கவலைப்படுகிறார்கள் என்று இயேசு வெளிப்படுத்தினார் (மத். 18:10). இரட்சிப்பு நமக்கு வழங்கப்பட்டதற்கு முன்பே அவர்கள்கூட அதில் ஆர்வத்தைக் காட்டியிருக்கிறார்கள் (1 பேதுரு 1:10-12).

கிறிஸ்தவர்கள் "எண்ணற்ற தேவதூதர்களின்" சிறப்பு ஐக்கியத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று எபிரெயர் 12:22 ஆதாரங்கள் கொடுக்கிற போது, அவர்கள் நமக்கு என்ன செய்தார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை. 1:14ல் குறிப்பிடப்பட்டுள்ள இரட்சிப்பு எதிர்காலத்தில் உள்ளபோது, நாம் இப்போது எதிர்பார்க்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டிருக்கிறோம். "நாம் நம்பியதைவிட இரட்சிப்பு நமக்கு மிகவும் அருகில் இருக்கிறது" என்று நாம் கூறப்படுகிறோம் (ரோமர் 13:11). கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டு இருக்கிற ஒரு இரட்சிப்பு இருக்கிறது (1 பேதுரு 1:5).

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சரியானதை செய்வதற்கான வல்லமையை தேவதூதர்கள் வழங்குகிறார்கள் என்ற எண்ணம் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு கோரிக்கை, வேதத்தினால் அல்ல. தேவதூதர்கள் உண்மையில் அத்தகைய அதிகாரத்தை வழங்கினால், பின்னர் அவர்கள் மிக சில மக்கள் மட்டுமே அதை பயன்படுத்த அனுமதிப்பர்! அப்போஸ்தலர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு மற்றும் உத்வேகம் வழங்கப்பட்டது (யோவான் 16:12, 13;

14:26; பார்க்க மத். 10:19, 20), ஆனால் அவர்களது வாழ்க்கையில் எல்லா பாவங்களையும் சமாளிக்க வல்லமை அவர்களுக்குக் கூட கொடுக்கப்படவில்லை. அவர்கள், கூட, அதை அடைய நம்மைப்போல ஆவிக்குரியவற்றில் வளர வேண்டியிருந்தது (1 பேதுரு 2:1, 2; 2 பேதுரு 1:5-11; 3:18). தேவன், அவரது ஜாக்கிரதை மூலம், பாவத்தின் மேல் வெற்றி பெற நமது விசுவாசத்தைப் பயன்படுத்துவதற்கு நமக்கு உதவும் சூழ்நிலைகளை உருவாக்கலாம். எனினும், தேவதூதர்கள் பரிந்துரைக்கும் திரைப்படத் திரையின் சித்தரிப்பு போல ஒருவனுக்குத் தீங்கிழைக்கும் வழியான அந்தப் பெருவழியிலிருந்து பாதுகாக்க, அவனை இன்று அவர் விலக்குவதில்லை.

இரட்சிப்பைப் பெற்றிருக்கிறவர்களுக்கு தேவதூதர்களின் மிகச் சிறந்த சேவை செய்யப்படுகிறது. அவர்கள் கிறிஸ்தவர்களாக இல்லாதவர்களைப் பாதுகாப்பார்கள் அல்லது அவர்களுக்குச் சேவை செய்வார்கள் என்பதற்கு வேதாகமத்தில் எந்த உறுதிமொழியும் காணப்படவில்லை.

## பயன்பாடு

### தேவன் தமது குமாரன் மூலம் பேசுகிறார் (1:1-3)

மனிதனுக்கு தேவனுடைய வெளிப்படுத்தல் கர்த்தராகிய கிறிஸ்துவாகிய அவரது குமாரன் மூலம் வந்தது. தேவன் மற்றும் கிறிஸ்துவின் முழுமையான தன்மை எழுதப்பட்ட வார்த்தை மூலமே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை எதைக் கொண்டு வருகிறது?

*தேவன் அவரது வார்த்தைகளைத் தெளிவானதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் செய்ய வேண்டியது இருந்தது, அல்லது அது பயனற்றதாகவும் நியாயமற்றதாகவும் இருக்கும்.* தேவனிடத்தில் இருந்து ஒரு புரிந்து கொள்ளக் கூடிய செய்தி இல்லாவிட்டால், மனிதனுக்கு இரட்சிப்படைய வழி இல்லை. அவர் நமது இரட்சிப்பிற்குத் தேவையான அறிவுரைகளைத் தெளிவாகக் கொடுத்துள்ளார்.

*நாம் அவரது வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கு நம்மை கொடுக்க வேண்டும்.* அதை உணர்ந்து கொள்ள நாம் கட்டளை இடப்படுகிறோம் (எபே. 5:17). நாம் பிதாவின் சித்தத்தைச் செய்ய மனதுள்ளவர்களானால், அவருடைய உபதேசங்களை நாம் அறிவோம் (யோவான் 7:17).

*நாம் மற்றவர்களுக்கு போதிக்கும்படியாக அவருடைய வார்த்தையை உணர்ந்து கொள்ள வேண்டும்.* தேவனுடைய வார்த்தையின் அறிவு மூலம் நாம் வளர அறிவுறுத்தப்படுகிறோம் (1 பேதுரு 2:2; 2 பேதுரு 3:18). வார்த்தையின் சரியான பயன்பாடு நாம் ஆசிரியர்களாக வளர்வதற்கு உதவுகிறது (எபி. 5:12-14). “திட உணவு” படிப்பதால் நாம் முதிர்ச்சியடைய உதவுகிறது, தேவனுடைய

சத்தியத்தின் முன்னேற்றமான போதனைகளை நேசிப்பது முதிர்ச்சிக்கான ஒரு நிச்சயமான அறிகுறியாகும்.

### தேவனில் தனிப்பட்ட விசுவாசம் (1:1, 2)

கிறிஸ்து மூலம் தேவனில் நம்பிக்கை கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றி வேதாகமம் கூறுவது நமது வாழ்க்கையின் அனுபவங்களில் தெளிவாகிறது.

*அநேகர் தங்கள் நல்ல நடத்தை குறித்த முடிவுகளில் குழப்பம் அடைகிறார்கள், ஏனென்றால் அவர்கள் வேதாகமத்தை அறிந்து கொள்ளவில்லை.* தனிப்பட்ட தேவனில் விசுவாசம் அவசியமாகிறது; அந்த விசுவாசம் இல்லாவிட்டால், நாம் சமுதாயத்தின் பல துறையை அழிக்கிறோம். வில்லியம் எஃப். பக்லி என்பவர் தேசிய திறனாய்வுக் கட்டுரை ஒன்றில் தனித்துவம் அற்ற தேவனைக் கொண்டிருக்கும் நினைவு மதத்தில் உள்ள மூன்று Rகளை பறிமுதல் செய்து விடுகிறது என்று கூறினார். அவையாவன: “Revelation” “வெளிப்பாடு,” “Regeneration” “மீளுருவாக்கம்,” மற்றும் “Responsibility” “பொறுப்புகள்.”[50]

*நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய தனிப்பட்ட தேவன் நமக்கு இல்லாவிட்டால், பின்பு ஒவ்வொரு மனிதனும் தானே சொந்த கடவுளாக இருந்து, எல்லா விஷயங்களிலும் இறுதி அதிகாரத்தை உடையவனாகிறான்.* இந்த மனநிலை வளர்ந்து, ஆதிக்கம் செலுத்தும் போது, குற்றம் நிச்சயமாக பரவலாகி விடுகிறது. பெருந்திரளான மக்களுக்குக் குழப்பமும் அராஜகமும் வாழ்க்கையின் வழி ஆகிறது. ஒரு தேசம் தேவனை இறுதியாக நிராகரிக்கும்போது, ஒவ்வொரு வீடும் ஒரு கோட்டையாக மாறுகிறது, எல்லோரும் சுய பாதுகாப்புக்காக ஒரு ஆயுதத்தை வைத்திருக்கிறார்கள்.

1989 இல் ஊழியத்தின் பணிக்காக தென் அமெரிக்காவில் உள்ள கயானாவிற்குச் நான் சென்றிருந்தபோது, பாதுகாப்பு இல்லாமல் இருந்த ஏழைகள் மற்றும் வயது சென்றோரிடம் இருந்து கோழிகள் திருடப்பட்டதாக புகார் கேட்டேன். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒருவிதமான வேலி இருந்தது, மற்றும் செல்வந்தர்கள் உயர்ந்த, இரும்பிலான தடை வேலியை தங்கள் வீடுகளில் வைத்திருந்தனர். 2003 இல் நிலைமை மிகவும் மோசமடைந்து, ஊழியர்கள் திரும்புவதற்கு அச்சம் அடைந்தனர். அங்கு பலருடைய வாழ்க்கைகளில் இருந்து தேவன் வெளியேற்றப்பட்டார்.

### வித்தியாசத்தை ஏற்படுத்துவது எது?

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் இன்றியமையாதவர்களாக இருந்தாலும், புதிய உடன்படிக்கையை நிறுவ வந்த குமாரனுடன் ஒப்பிட முடியாது. எபிரெயர் பழைய மற்றும் புதிய

உடன்படிக்கைகளுக்கு இடையே உள்ள கடுமையான முரண்பாடுகளை எடுத்துக் காண்பிக்கிறது, கடைசி தூதரின் தன்மையைவிட வேறு எதிலும் வேறுபட்டதாக இல்லை. பழைய ஏற்பாட்டின் தூதர்கள் மகிமையான சத்தியங்களைக் கொண்டு வந்தனர். ஆனால் இப்பொழுது நாம் மகத்தான ஒன்றைக் கொண்டுள்ளோம்.

*பழையது முழுமையடையவில்லை - அதன் "பல பகுதிகளோடு ... மற்றும் பல வழிகளுடன்";* புதியது முழுமையானது மற்றும் இறுதியானது. இது பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசமாகும். இந்த தேவன் தமது பரிசுத்தவான்கள் அனைவருக்கும் ஒரே ஒருமுறை தம்முடைய சத்தியத்தைக் கொடுத்தார் என்று அர்த்தமாகும்.

*குமாரன் என்பவர் பிதா அவர் மூலமாகத் திருவுளம் பற்றினார் என்ற சாதாரண மத்தியஸ்தர் என்பதைவிட மேலானவர்.* அவர் மூலமாகவே அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டு, அவரே சர்வத்துக்கும் சுதந்தரவாளியாகவும் இருந்தார் (வசனம் 2; யோவான் 1:1-3). அதிசயங்களின் அதிசயம்! நாம் அவருடனேகூட "உடன் சுதந்தரருமாமே" (சமமான சுதந்தரவாளிகள்) (ரோமர் 8:17). குமாரனைப் பற்றிய இந்த மகத்தான கருத்துகளை நாம் எப்படி சாதாரணமாகக் கடந்து செல்ல முடியும்?

*பரலோகத்தில் அனைத்தும் தெளிவாக்கப்படும்.* "அவருடைய இயல்பின் சரியான பிரதிநிதித்துவத்தின்" அர்த்தம் (வசனம் 3) தெளிவாகும்போது, நிச்சயமாக, நாம் அதிலே இன்னும் அதிகமாய்ச் சந்தோஷப்படுவோம். ஆயத்தமாக்கப்பட்ட இடத்திற்கு ஆயத்தமாக, நாம் இப்பொழுதே மேன்மை மிகுந்த வார்த்தையை அதிகமாக தியானிக்க வேண்டும். நம்முடைய கிறிஸ்துவைப் பற்றி இந்த வசனங்களைப் படிப்பது "கிறிஸ்துவே, நாங்கள் அனைவரும் உம்மை நேசிக்கிறோம்" மற்றும் "கிறிஸ்துவே உலகத்திற்காக நாங்கள் பாடுகிறோம்" என்று பாட விரும்புவது ஆகும்.

## குமாரனின் செய்தியைப் பெறுதல்

சுவிசேஷ செய்தியில் நாம் எல்லா காலத்தின் மகத்தான சத்தியத்தைக் கொண்டுள்ளோம், நாம் ஏன் இங்கே இருக்கிறோம், எங்கு இருந்து வந்தோம், எங்கு செல்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள எதுவுமே ஒப்பிட முடியாது. வேதாகமம் மட்டுமே பதில்களைத் தருகிறது.

*கிறிஸ்துவின் செய்தியை பிரசங்கித்தல் கிறிஸ்துவை பிரசங்கித்தல் ஆகும்.* உண்மையிலேயே அவருடைய போதனையைக் கடைப்பிடிக்காமல் கிறிஸ்துவைப் பின்தொடர்வதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மற்றவைகளை நம்புவது முட்டாள்தனமானதும் முரண்பாடானதுமாகும். எபிரெயர் மூலமாக, குறிப்பாக, பழைய ஏற்பாட்டுச் செய்திகள் குமாரனைப் பற்றிய

அதிகமான வெளிப்படுத்தலுக்கு ஆயத்தப்படுவதற்காகக் கொடுக்கப்பட்டது. அவை அனைத்தும் கிறிஸ்துவை சுட்டிக் காட்டுகின்றன. சவக்கடல் சுருள்களை எழுதியவர்கள், அவர்களே கடைசிக் காலத்தின் விளிம்பில் இருப்பதாக நினைத்தார்கள். குறைந்தது ஒரு பகுதியிலாவது அவர்கள் கூறுவது தவறாகும், ஏனெனில் அவர்கள் வேதவாக்கியங்களின் கிறிஸ்துவை அறியாதிருந்தார்கள். அவர்களுடைய "நீதியுள்ள போதகர்" மேசியா அல்ல.[51]

*குமாரன் மூலமாக மட்டுமே தேவன் இப்போது நம்மிடம் பேசுகிறார்.* இந்த உண்மை மறுரூபமான நிகழ்ச்சி மூலம் வலியுறுத்தப்படுகிறது. (மத். 17:1-8; மாற்கு 9:2-7; லூக். 9:28-36). அந்த சந்தர்ப்பத்தில் தேவனுடைய சத்தம் "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்!" என்று அறிவித்தது (மத். 17:5). இன்று நாம் கிறிஸ்துவின் வார்த்தையை மட்டுமே நம் அதிகாரமாகக் கேட்க வேண்டும்.

*அப்போஸ்தலருடைய செய்தியை ஏற்றுக்கொள்கிறவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள்* (மத். 10:40). அவரது சுவிசேஷத்துடன் யாரையும் அவர் அனுப்பி இருந்திருக்காவிட்டால், நமக்குக் கிட்டத்தட்ட இயேசுவைப் பற்றி எதுவும் தெரியாது. அவர் மறுரூபமாகி அந்தச் சத்தம் உண்டாகையில், "இயேசு ஒருவரே காணப்பட்டார்" (லூக். 9:36) என்று வேதம் கூறுகிறது. நம்முடைய செய்தியும் அவர் மோசே மற்றும் எலியாவிற்குப் பதிலாகவும் மேம்பட்டவராகவும் இருக்கிறார் என்ற உறுதியில் கவனம் செலுத்த வேண்டும் - நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள். எல்லா காரியங்களிலும் அவர் மட்டுமே அதிகாரம் உடையவராக இருக்கிறார். வல்லமை வாய்ந்த எழுத்தாளர்கள் மூலம் இயேசுவைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். இப்படியாக, தேவனுடைய குமாரனை அனுப்பியது நாம் வேதாகம வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு முக்கியமானதாகும்.

*இயேசுவின் வெளிப்பாடு தனித்துவமானது.* இயேசுவின் தெய்வீகத்தைப் பற்றி இன்றைய உலகில் பரவலாக இருக்கும் சந்தேகங்களை ரேமண்ட் பிரவுன் பேசினார். "பாவம் இல்லாத தன்மை உடைய *தனித்துவமான வெளிப்பாடு* உள்ள, நமது இரட்சிப்பிற்குப் பயனுள்ளதாக இருக்கிற தியாகத்தைச் செய்த, பரலோகத்திலும், பூலோகத்திலும் போட்டியில்லாத அதிகாரம் உடையவராக இருக்கிற கிறிஸ்துவை எபிரெயர் நமக்கு அறிமுகம் செய்தார்"[52] என்று திறம்பட பதிலளித்தார். இது எளிமையானதும் சிறந்த பாதுகாப்பானதுமாகும்.

### தேவன், "சேரக்கூடாதவர்" (1:3; 1 தீமோ. 6:16)

இது அமுக்கப்பட்ட நிறை கொண்ட நட்சத்திரமாக, அதனுடைய ஈர்ப்பினால் ஒளி கூட தப்பிக்க அனுமதிக்கப் போவதில்லை என்பதால், விண்வெளியில் உள்ள ஒரு கருப்பு துளை, காணாத தேவனுக்கு உடல்

ஒப்புமை ஆக்க முடியுமா? விண்வெளியில் உள்ள கருப்பு துளையைப் பார்க்க முடியாது. விண்வெளியில் மற்ற "அருகிலுள்ள" பொருள்களின் மீதுள்ள அதன் ஈர்ப்பின் காரணமாக நாம் அதன் இருப்பை மட்டுமே அறிந்திருக்கிறோம். இந்த ஒப்புமை "சேரக்கூடாதவர்" என்பதற்கு எதிரிடையானது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும், ஏனென்றால் ஒரு கருப்பு துளை அந்த பகுதியின் அருகே உள்ள எல்லாவற்றையும் தன்னுடைய நிறையாக எடுத்துக் கொண்டு, தன்னை அணுகும் எந்தப் பொருளும் தப்பிக்கும் சாத்தியக்கூறு இல்லாமல் தனக்குள் இழுக்கப்படுவதற்கு ஏதுவான அணுகுமுறையை கட்டாயமாக்குகிறது. எனினும், தேவன் எதுவும் தப்பிக்க முடியாத ஒன்றை உருவாக்கினால், பின்னர் நிச்சயமாக எதுவும் அணுக முடியாத வல்லமையையும் உருவாக்குவார் - அல்லது அவரே அந்த வல்லமையாகவும் இருக்க முடியும். குறைந்தபட்சம், இது தேவனுடைய பரந்து விரிந்த வல்லமைக்கு ஒப்புமையாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தில் அவர் செய்திருக்கிற தனித்துவமான விஷயங்கள், நமது வரையறுக்கப்பட்ட மனதில் இயற்பியல் சார்ந்த சேரக்கூடாத அல்லது அணுகக்கூடாத பொருட்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனினும், இயற்பியல் உலகில் இருந்து எந்த ஒப்புமையும் தேவனுடைய இயல்பை போதுமான அளவு விவரிக்க முடியாது.

### "மிகச் சரியான பிரதிநிதித்துவம்" (1:3)

1988ம் வருடம் ஆகஸ்டு மாதம், அலபாமா ஸ்டேட்ஹவுஸ் விஜயத்தின் போது, நான் அலபாமா மாநிலத்தின் அதிகாரப்பூர்வ முத்திரையை என் கையில் வைத்திருந்தேன். முத்திரை மீது எழுதப்பட்ட எழுத்துக்கள் மாநிலத்தின் அதிகாரத்தை பிரதிநிதித்துவம் செய்தன. நான் அதை வைத்திருந்தாலும், மற்றும் ஒருவேளை ஒரு துண்டு காகிதத்தில் அந்த முத்திரையை பதிய வைக்க அனுமதிக்கப்பட்டிருந்தாலும், நான் அதைப் பயன்படுத்த எந்த அதிகாரமும் இல்லை. என்னிடம் முத்திரை இருந்தது, ஆனால் எனக்கு அதிகாரம் இல்லை இதன் விளைவாக, அது எனக்கு பயனற்றதாக இருந்தது. மாறாக, இயேசு - தேவனுடைய முழு அதிகாரத்துடன் "அவரது இயல்பின் சரியான பிரதிநிதித்துவமாக" இருந்து அவருடைய தெய்வீக அதிகாரத்துடன் தேவனுக்காக பேச முடியும். அவருக்கு பிரதிநிதித்துவமும் இருந்தது, அவர் அதிகாரத்தையும் பெற்றிருந்தார்.

### அவருடைய உறுதியான வார்த்தை (1:3)

நாம் நம்முடைய சர்வவல்லமையுள்ள தேவனையும், அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவரையும் போதுமான அளவு உபதேசம் செய்து கற்பிக்கிறோமா? எபிரெயரில் கிறிஸ்துவுக்கு இருப்பதாகக் கூறப்படும் தனிப்பட்ட குணநலன்கள் தேவனுக்கும் உரியதாக ஏசாயா

40:22, 26-28 குறிப்பிடுகிறது. அவரது வல்லமை பூமியில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குகிறது. அவற்றில் இருந்து நம்மை விடுவிப்பதாக அவர் வாக்குறுதி அளிக்கவில்லை என்றாலும், அவை நம்முடைய நன்மைக்காக கிரியை செய்யும்படிச் செய்கிறார் (ரோமர் 8:28).

கிறிஸ்துவினால் எல்லா விஷயங்களும் “ஒன்றாக பிணைக்கப் படுகிறது.” அவர் பேசுகிறார், இந்த உலகம் வீசி எறியப்படுவதில் இருந்து தவிர்க்கப்படுகிறது. அதே விதமாக, “நீந்துகிற மீன்கள் உண்டாகட்டும்!” என்று தேவன் கூற அவைகள் காணப்பட்டன. இந்தக் கருத்து தேவனுடைய சிருஷ்டிப்பைத் தவிர வேறொன்றையும் கூற அனுமதிக்கவில்லை. முதுகெலும்பு இல்லாத ஒன்று ஒரு முதுகெலும்பு உள்ளதாக மாறியது என்ற பரிணாம வளர்ச்சி புதைபடிவ பதிவுகளில் காணப்படவில்லை. பரிணாம கோட்பாட்டை உண்மை என்று நிரூபிக்க, அத்தகைய மாற்றத்திற்கான ஆதாரம் அவசியம். ஆனால் அதைச் சரிபார்க்க புதைபடிவ பதிவுகளில் பல “இடைவெளிகள்” இருக்கின்றன. இத்தகைய பரிணாம வளர்ச்சி போன்ற ஒரு கோட்பாடு வேதாகமத்தால் நிராகரிக்கப்படுகிறது. இயேசுவை அவருடைய செயல்படும் காரியஸ்தனாகக் கொண்டு, தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார்.

### “பாவங்களின் சுத்திகரிப்பு” (1:3)

ஒவ்வொரு ஆத்துமாவும் பாவத்தில் இருந்து அதன் குற்றம் மற்றும் நித்திய விளைவுகளில் இருந்து, சுத்திகரிக்கப்படும்படி இயேசு செய்தார், புதிய உடன்படிக்கையின் அடையாளமாகவும் அதை நிறைவேற்றவும் அவர் தமது இரத்தத்தைச் சிந்தினார் (மத். 26:28). கலாச்சார உயரடுக்கு என்று அழைக்கப்படுபவர்கள் இதை ஒரு அருவருப்பானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான யோசனை எனக் கருதினார்கள். மனிதகுலத்தை இரட்சிப்பதற்கு ஒருவன் மரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் ஒரு வெறுக்கத்தக்க சிந்தனையாகப் பார்க்கிறார்கள். எனினும், விசுவாசிக்கிற நமக்கு, அது ஒரு அழகிய கவிதை அல்லது இசையின் ஒரு சிறு பகுதி போல இருக்கிறது. இது எல்லா கதைகளிலும் மிகச் சிறந்ததாக இருக்கிறது. ஒருவன் நாம் வாழ வேண்டும் என்பதற்காக சில தியாகங்களைச் செய்திருக்கலாம் அல்லது மரிக்கவும் செய்திருக்கிறான் என்று தெரிந்து கொள்வதைவிட, சில காரியங்கள் நாம் வேறு சிலரை அதிகமாக நேசிக்கச் செய்யும். வேறு எதுவும் கொண்டிருக்க முடியாத வல்லமையை இந்தச் செய்தி கொண்டுள்ளது. நமது பாவங்களில் இருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேறு வழி கிடையாது, அல்லது தேவன் உபயோகப்படுத்தி இருப்பார். பயனுள்ளவை அனைத்திற்கும் கிரயம் உண்டு என்பது நமது பிதாவிற்குத் தெரியும் என்று கிறிஸ்தவர்கள் கண்டுணர்ந்து

இருக்கின்றனர். நீதி கிடைப்பதற்கு பாவத்திற்கான ஒரு பொருத்தமான கிரயத்தைச் செலுத்த வேண்டும் என்பதும் அபூரணமும் தன்னில் தானே பூரணம் அடைய முடியாது என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, அவர் உயர்வான கிரயத்தைச் செலுத்தினார், பெரிய பரிகார விலை - இயேசுவின் இரத்தம்!

**இயேசுவா அல்லது ஒரு தேவதூதனா? (1:4)**

பரலோகம் தேவதூதர்களின் வாசஸ்தலமாகும், அவர்கள் இயேசுவோடு மகிமையுடன் வருவார்கள் (மத். 25:31). "பலத்த சவுரியவான்களாக" (சங். 103:20), பிதாவின் கட்டளைகளை அவர்கள் செய்கிறார்கள்; அவர்கள் தேவனின் தூதர்கள் (சங். 104:4; NASB மற்றும் KJV ஐ ஒப்பிடு); அவர்கள் பரிசுத்தமாக இருந்தார்கள் (மத். 25:31), அவர்கள் தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ்ந்திருந்தார்கள் (வெளி. 5:11). அவர்கள் மூலமாக அல்லவா தேவன் உலகைக் கட்டுப்படுத்துகிறார்? நாம் அவரை நேசிக்கும்போது, நம் நன்மைக்காக தெய்வீக அக்கறையுடன் அவர்கள் மூலமாக அல்லவா அவர் எல்லாவற்றையும் சீராக்கி ஒன்றாக வேலை செய்யும்படி செய்கிறார்? (காண்க ரோமர் 8:28.)

எபிரெயர் எழுதப்படும்போது, சிலர் இயேசுவை "மனிதர்களுடைய விவகாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துபவர்களாக நம்பப்படுகின்ற ஆவிக்குரியவர்களை விட உயர்ந்தவராக"[53] கொண்டிராமல் ஒரு "தேவதூதன்" என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். அவர் தேவதூதர்களைவிட மிகவும் மேன்மை உள்ளவர் ஆனார்.

**மேற்கோள்களின் ஒரு தொடர் தொடங்குகிறது (1:5)**

குமாரன் உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்து ஆளுகை செய்வார் என்ற சங்கீதம் 110:1 இல் உள்ள சிந்தனையை வசனம் 3 குறிப்பிடுகிறது. பழைய ஏற்பாட்டிலுள்ள, பெரும்பாலும் சங்கீதங்களில் உள்ள ஏழு மேற்கோள்களின் தொடருடன் வசனம் 5 தொடங்குகிறது (சங். 2:7; 104:4; 45:6, 7; 102:25-27; 110:1). விதிவிலக்குகளாக இரண்டாவது மற்றும் மூன்றாவது மேற்கோள்கள் (2 சாமு. 7:14 மற்றும் உபா. 32:43; செப்துவஜிந்த்) இல் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. சங்கீதம் 2:7-ல் மேற்கோள் காட்டப்பட்ட முதல் கூற்று, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கும் சபைக்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது; அது மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. தேவனுடைய "அபிஷேகம் செய்யப்பட்டவரைக்" குறிப்பிட்டுள்ளதால், சங்கீதம் 2 ஏற்கனவே மீட்பாளருடையதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது (எபிரெய பாஷையிலே *மேசியா,* கிரேக்க பாஷையிலே *கிறிஸ்டோஸ்*). இல்லையெனில், இந்த நிருபத்தில் உள்ள காரணங்கள் அதன் முதல் வாசகர்களிடம் குறைவான

மதிப்பை கொண்டிருந்திருக்கும். இது பல வழிகளில் இயேசுவுக்கு பயன்படுத்தப்பட்டது. அப்போஸ்தலர் 4:25, 26-ல் சங்கீதம் 2:1, 2-ஐ ஜெபத்தில் அப்போஸ்தலன் மேற்கோள் காட்டினான். எபிரெயர் 1:5அ-லும் மற்றும் 5:5லும் சங்கீதம் 2:8 மீண்டும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அது சொல்கிறது, “என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்” என்பது கிறிஸ்துவே “எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளி” என்பதைத் தெரிவிக்கிறது (எபி. 1:2). சங்கீதம் 2:7 இல் உள்ள வார்த்தைகள், எபிரெயர் 1:5 இல் தேவதூதர்களிலும் இயேசு மேலானவர் என்பதை வலியுறுத்த பயன்படுத்தப்படுகின்றன. அந்த வார்த்தைகள் அப்போஸ்தலர் 13:33, 34 இலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன, அங்கு பவுல் அவற்றை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பயன்படுத்தினான். சங்கீதத்தின் பயன்பாடு கிறிஸ்துவின் குமாரத்துவத்தில் அப்போஸ்தல நம்பிக்கையைச் சுட்டிக்காட்டுகிறது, மேலும் யூதர்களுக்கு இயேசுவை மேசியாவாகக் காட்டுவதில் இந்த சங்கீதம் முக்கியத்துவம் வாய்ந்தது என அறிவுறுத்துகிறது. யூத நண்பர்கள் தங்கள் வேதாகமத்தை நம்பினால் விசுவாசத்தைப் பாதுகாப்பவர்கள், இப்பொழுதும் கூட அவர்களுடன் வசனத்தைச் சரியாகவும் திறம்படமாகவும் பயன்படுத்தலாம்.

### வேதாகமத்தின் அமைதி (1:5)

தேவன் ஒருபோதும் ஒரு தேவதூதனுடன் “நீர் என்னுடைய குமாரன்” என்று சொன்னதில்லை, சிருஷ்டிக்கப்பட்ட ஒரு தேவதூதனை இந்த வெளிப்பாடு மூலம் எப்போதுமே குறிப்பிடலாம் என்பது முற்றிலும் ஒழுங்கு முறைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. அமைதி ஏற்றுக்கொள்ளப்படுவது இல்லை, ஆனால் கட்டுப்படுத்தப்படு கிறது. இந்தக் குறிப்பைக் காணத் தவறுதல் என்பது வேத வசனங்கள் மற்றும் அவற்றின் அதிகாரத்திற்குமான மரியாதை சம்பந்தமாக ஒவ்வொரு உயர்ந்த, பரிசுத்த கோட்பாடை. மீறும் செயலாக இருந்து, வேதாகமத்தின் அமைதியைக் கருதி, அதன் போதனையுடன் சேர்க்கும் பொருட்டானதாகும். அத்தகைய காரணத்தை நாம் பின்பற்றி, வேதவசனங்களின் அமைதியின் முக்கியத்துவத்தை புறக்கணித்தால், வேதாகம போதனைகளின் அனைத்து வகையான “புதிய கண்டுபிடிப்புகள்” அனுமதிக்கப்படுவதாக பார்க்கப்படும். சபைக்குள் அங்கீகரிக்கப்படாத மாற்றங்களை கொண்டுவர விரும்புபவர்கள் அமைதி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று வாதிடுகின்றனர், ஆனால் அவர்களது அணுகுமுறை எபிரெயர் மூலம் தெளிவாக நிராகரிக்கப்படுகிறது.

**"நீர் என்னுடைய குமாரன்" (1:5)**

இயேசுவும் அதே நேரத்தில் தேவனுடைய குமாரனும் தாவீதின் குமாரனும் ஆவார். நாம் அவரை மிகவும் மகிமைப்படுத்த முடியாது. அவரது மனிதனின் அல்லது பாத்திரத்தின் எந்தவொரு ஒழுக்கக்கேடும் ஒருவனை அவருக்குத் தகுகியற்றவனாகச் செய்கிறது. 1:5 இல் உள்ள இரு மேற்கோள்களும் 2 சாமுவேல் 7:14 மற்றும் 1 நாளாகமம் 17:13 இல் உள்ளதாகும். முதல் பயன்பாடு சாலொமோனுக்கானதாக இருந்தது, ஆனால் அதிகமான மற்றும் இறுதி நிறைவேற்றம் கிறிஸ்துவில் இருந்தது. 2 சாமுவேல் 7:14-ன் இரண்டாம் பகுதி ("அவன் அக்கிரமம் செய்தால்") கிறிஸ்துவுக்கு பயன்படுத்த முடியாது, ஏனென்றால் அவர் பாவம் செய்யவில்லை (1 பேதுரு 2:21, 22). சில தீர்க்கதரிசனங்கள் இரண்டு அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் நமக்குச் செவி கொடுப்பவர்களைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

**தேவன் இன்னும் பேசுகிறார் (1:7)**

1:7 இல் உள்ள "அவர் சொல்கிறார்" என்னும் வார்த்தை நமக்கு மிகுந்த ஊக்கத்தைத் தருகிறது. தேவன் வேதவசனங்கள் மூலமாகப் பேசுகிறார் என்பது நமக்குத் தெரியும், மேலும் இந்த வசனத்தில் இருந்து, அவர் இன்னும் அதே வேதவசனங்கள் மூலமாக இன்றைக்கும் நம்மிடம் பேசுகிறார் என்று நாம் முடிவுக்கு வரலாம்.

**"தேவனே, உம்முடைய சிங்காசனம்" (1:8)**

வேதவாக்கியங்களில் காணப்படும் கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கான தெளிவான சான்றுகளில் ஒன்று 1:8ல் உள்ளது. சங்கீதம் 45:6, 7 இல் தேவன் தாமே இந்த சாட்சியைக் கொடுத்தார். இயேசு பிதாவால் "தேவனே" என அழைக்கப்பட்டார். அவர் யார் என்பதற்காக, நாம் அவருக்கு மரியாதை கொடுத்து அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். இயேசு தாமே தம்மை தேவனாக ஒருபோதும் கூறிக் கொள்ளவில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஒருவேளை அவர் அந்த வார்த்தைகளில் அறிவிக்கவில்லை, ஆனால் அது புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் உட்கிடையாகக் குறிக்கப்படுகிறது. உதாரணமாக, என் ஆண்டவரே! என் தேவனே! என்று தோமா அழைத்தபோது அவர் கடிந்து கொள்ளவில்லை (யோவான் 20:28, 29). நாம் அவரை அப்படியே ஏற்றுக்கொண்டால் நிச்சயமாக அவர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**"நீதியுள்ள செங்கோல்" (1:8)**

"நீதியானது" வெறுமனே சரியானதைச் செய்வதன் விளைவாகும். நாம் சரியானதைச் செய்யாவிட்டால், நீதியுள்ளவர்களாய் கருதப்பட

முடியாது (பார்க்க 1 யோவான் 3:7). தேவன் கட்டளையிட்ட அனைத்தும் நீதியுள்ளவர்களாயிருக்கும்படி - தவறு செய்ய யாரையும் அவர் கட்டளையிடவில்லை (சங். 119:172).

யோவான்ஸ்நானகன் இயேசுவுக்கு ஞானஸ்நானம் அளிப்பதைத் தவிர்க்க முயன்றபோது, "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத். 3:15) என்று இயேசு அவனிடம் வேண்டிக் கொண்டார். இது யோவானுக்கு திருப்தி அளித்தது. இயேசு சங்கீதக்காரனின் எண்ணத்தைப் பகிர்ந்து கொண்டார்: "உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்" (சங். 119:172). தேவனுடைய கட்டளைகள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய அவர் உறுதியாய் இருந்தார். பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதால், இயேசுவைப் போல நல்லவர் ஒருவருக்கு அவன் பிரசங்கிக்கிற ஞானஸ்நானம் எப்படி தேவைப்படும் என்பதை யோவானால் வெளிப்படையாக புரிந்து கொள்ள முடியவில்லை (காண்க மாற்கு 1:4 மற்றும் லூக். 3:3). என்றாலும், இயேசு பூமியில் இருக்கும்போது எந்த விவாதமும் செய்யாமல் தேவனுடைய கட்டளைகளை ஏற்றுக்கொண்டார். நம் தேவனுடைய கட்டளைகளில் குறைவான மரியாதை கொண்ட சிலர் செய்கிறது போல அவர் ஞரனஸ்நானத்தைத் தவிர்க்கவில்லை. "இப்பொழுது" சரியானது என்று அவர் கூறினார் - விதிமுறைகளுக்கு ஒரு விதிவிலக்காக - இரட்சகருக்கு அவருடைய சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையிலும் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு சீஷன் தன் எஜமானைவிட உயர்ந்தவராக இருக்கக்கூடாது, ஆனால் நாம் மிகவும் எளிமையாக ஒரு கட்டளையை மறுக்கும் போது நாம் கூறுவது அதுவாகும்.

இயேசு நீதியை நேசிக்கிறார் (வசனம் 9). சங்கீதக்காரனோடு அவர் சொல்வார், "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்" (சங். 119:97). நியாயப்பிரமாணம் அல்லது தேவனுடைய கற்பனைகளைத் தவிர வேறு எதையும் அவர் தியானித்தாரா? இயேசுவின் முதன்மையான கவனம் அவரது பிதாவின் சித்தமாக இருந்தது, நாம் இருக்க வேண்டியது போலவே.

**கர்த்தர் அக்கிரமத்தை வெறுக்கிறார் (1:9)**

நீதியைச் செய்வதற்கும் நேசிப்பதற்கும் இயேசு கொண்டிருந்த அணுகுமுறைக்கு மாறாக. சிலர் நீதியை வெறுக்கிறார்கள். நமது கர்த்தரும் மீட்பருமானவர் எதிராக உள்ளார்: அவர் அக்கிரமத்தை வெறுக்கிறார். "அக்கிரமம்" என்பதற்கான சொல், சொல்லர்த்தமாக "சட்டத்திற்கு எதிராக" (ἀνομία, *அனோமியா*) என்பதாகும். மேலும் "சட்டவிரோதம், சட்டத்தை மீறுதல், அல்லது பொது துன்மார்க்கம்." ஆகிய பொருளைக் கொண்டுள்ளது. மாற்கு 7:20-23; 1 கொரிந்தியர் 6:9,

10; கலா. 5:19-21; 1 பேதுரு 4:1-3. உட்பட, "சட்டத்திற்கு விரோதமாக" இருப்பதன் அர்த்தம் என்னவென்று பல வசனங்கள் அறிவிக்கின்றன.

ஒரே சமயத்தில் நீதியை நேசிக்கவும், அக்கிரமத்தை வெறுக்கவும் முடியாது (மத். 6:24; யாக். 4:4; 1 யோவான் 2:15-17). ஒருவன் உலகத்தோடு சமரசம் செய்து, மேலும் இன்னும் கிறிஸ்துவைப் பின்பற்ற முடியும் என்று நினைப்பவன் கடுமையான தவறில் இருக்கிறான் - ஒருவன் கர்த்தரோடே இல்லாதிருந்தால், அவன் அவருக்கு எதிராக இருக்கிறான் (மத். 12:30). இயேசு அவரது பிதாவின் வீட்டைத் தீட்டாக்கின காசுக்காரர்களிடம் கோபம் நிறைந்தவராய் இருந்தார் (யோவான் 2:13-17). தவறான செயல்களின் மீதான அவரது வெறுப்பு அவரை "பட்சித்தது"! இயேசு தவறான உபதேசத்தை வெறுக்கிறார் (வெளி. 2:15). குறைந்தது, நாம் எப்படி அதை வெறுக்க முடியும்

நாம் "நீதிமானாகிய லோத்தை" போல் ஒழுக்கமற்ற மனிதர்களின் சிற்றின்ப நடத்தையினால் அடக்கப்பட்டவனாக இருக்க வேண்டும் (அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் நீதிமான் என்பதால் கண்டதும் கேட்டதுமான அவர்களது அக்கிரமச் செயல்களால் அவனது நீதியுள்ள ஆத்துமா நாளுக்கு நாள் துன்புறுத்தப்பட்டதாக உணர்ந்தான்) (2 பேதுரு 2:7, 8). வேதாகமத்தை, சாத்தானுடைய தவறான பயன்படுத்துதலை மறுக்க மட்டுமல்லாமல், அவனை வெளியேறுமாறு கட்டளையிடவும் இயேசுவுக்கு வல்லமை இருந்தது ("அப்பாலே போ சாத்தானே!" மத். 4:10). நாம் விசுவாசத்தால் அதை செயல்படுத்தினால் அதையே செய்ய கிறிஸ்துவில் ஒழுக்கமான வல்லமை நமக்கு இருக்கிறது (யாக். 4:7). இயேசு தன்னை நிராகரித்ததன் விளைவுகளை அறிந்து, அவர் பாவம் நிறைந்த எருசலேமுக்காக அழுதார் (லூக். 19:41; மத். 23:37-39). நமது பதில் என்ன?

ஏனெனில் அவர் அக்கிரமத்தை வெறுத்து நீதியை விரும்புகிறார். அவர் "ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்" (எபி. 1:9). நாம் நீதியின் கிரீடம் பெறும் போது, மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்போம் (2 தீமோ. 4:8).

### "கர்த்தாவே, நீர் ஆதியிலே" (1:10-12)

பிதாவாகிய தேவன் இயேசுவை "கர்த்தாவே" என அழைத்தார். இந்த உண்மை சங்கீதம் 110:1-ஐ இயேசு மேற்கோள் காட்டியது போல் அவரால் மத்தேயு 22:43, 44-ல் வலியுறுத்தப்பட்டது. தேவதூதர்கள் அவரை "கர்த்தராகிய கிறிஸ்து" என்று அழைத்தார்கள் (லூக். 2:11). அவருடைய சீஷர்கள் பூமியில் அவரை "போதகரென்றும், ஆண்டவரென்றும்" அழைத்தார்கள் (யோவான் 13:13). யாரிடம் சவுல் பேசினான் என்று அவன் தெரியாத போது அவனது பதிலில் குறிப்பிடப்பட்டபடி, இந்த வார்த்தை சில நேரங்களில் "ஐயா" போன்ற ஏதோ ஒன்றைக் குறித்தது (அப். 9:5). தோமா, "ஆண்டவரே! என்

தேவனே!" என்று கூறிய பொழுது யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறான் என்ற அவன் தெரிந்திருந்தான் (யோவான் 20:28). "ஆண்டவர்" (κύριος, *குரியோஸ்*) என்பது அதிகாரத்தில் ஒரு உச்சத்தை அல்லது ஒருவரது கட்டுப்பாட்டுக்குள் என்பதைக் குறிக்கிறது. "ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" என்று இயேசு கூறியது ஆச்சரியமே இல்லை (மாற்கு 2:28), அவர் ஓய்வுநாளின் நியதியைக் கொடுத்தார் என்பதை இது குறிக்கிறது. "கர்த்தர்" என்பதால் அவர் பொருத்தமானது எனப் பார்த்து அவர் அதைக் கட்டுப்படுத்த, அதை அகற்றக்கூட முடியும்!

கிறிஸ்துவை "கர்த்தர்" என்று அறிக்கையிடும் போது (ரோமர் 10:9; 1 பேதுரு 3:15), நமது வாழ்க்கையை ஆட்சி செய்பவராகவும் கட்டுப்படுத்துபவராகவும் நம்மை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டுமோ அவரை ஏற்றுக்கொள்கிறோம். நாம் அதைச் செய்யும்போது, எது நல்லது, ஏற்கத்தக்கது மற்றும் நமது வாழ்க்கைக்குச் சரியானது என்பதை நாம் அறிந்து கொள்வோம் (ரோமர் 12:1, 2). கர்த்தராக நம்மை அவரிடம் சமர்ப்பிக்கும் போது, ஒரு திரை நமது மனக் கண்களில் இருந்து நீக்கப்பட்டு, முன்பு நாம் புரிந்துகொள்ளாததை நாம் புரிந்து கொள்கிறோம் (2 கொரி. 3:14). யூத கிறிஸ்தவர்கள் மறைவதற்கு மோசேக்கு ஆதரவாக தங்கள் தப்பிதமான எண்ணத்தை அனுமதிக்க வேண்டியதாய் இருந்தது; பின்னர் திரை தூக்கப்பட்டு, அவர்கள் இயேசுவை உண்மையில் யார் அவர் என்று உணரத் தொடங்கினர்.

### "வஸ்திரம்போலப் பழைமையாய்ப்போம்" (1:10-12)

பூமி பழையதாகிக் கொண்டிருக்கிறது மேலும் ஒரு நாள் கடந்து போகும். "இது விஞ்ஞானிகளால் உலகம் கீழே வந்துகொண்டிருக்கிறது என கருதப்பட்டு என்ட்ரோபி விதி அல்லது வெப்பவியக்கவியல் இரண்டாவது விதி என்று அழைக்கப்படுவதின் ஒரு அற்புதமான கவிதை நடை விளக்கம். ஆனால் படைத்தவர் தனது சொந்த விதியைக் கொண்டிருந்து எப்போதும் மாறாதவராக இருக்கிறார்"[54] என்று ரே சி. ஸ்டெட்மேன் கூறினார். இது உண்மையான அறிவியலுக்கும் வேதாகமத்திற்கும் இடையிலான நல்லிணக்கம் குறித்த ஒரு படிப்பினையின் ஒரு சிறந்த அடிப்படையாகும்.

வேறு எல்லாம் மாறினாலும், கிறிஸ்துவும் அவரது செய்தியும் மாறுவதில்லை! நித்தியமான கிறிஸ்துவால் நமது மனோரீதியான மற்றும் ஆவிக்குரிய தேவைகளைச் சரியாகப் பூர்த்தி செய்ய முடியும். விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் அற்புதமான முன்னேற்றங்களைச் செய்திருந்த போதிலும், நாம் இன்னும் அதே மனிதனாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு கொடுத்த இரட்சிக்கும் நற்செய்தியின் தேவையில் இருக்கிறோம். "ஆச்சரியத்தால் எப்போதும் தேவனை ஒன்றும் பற்றிக்கொள்ளவில்லை. தேவனால்

கையாள முடியாதது என்று எதுவும் நடக்கவில்லை. இயேசு கிறிஸ்து, மாறாதவர், சமகாலத்தவர், நித்தியமாக நிகழ் காலத்திய தேவனால் வெற்றியையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வர முடியாத எதுவும் நம் வழியில் வரவில்லை."[55]

**"என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" (1:13)**

தேவன் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்கார ஒருபோதும் ஒரு தூதனை அழைத்ததில்லை. எந்த தேவதூதனும் இதுபோன்று குறிப்பிட்டு அழைக்கப்பட்டு இருக்கவில்லை, ஏனென்றால் எந்த தேவதூதனும் எப்போதும் அத்தகைய பாராட்டுக்கும் உயர்வுக்கும் தகுதியானவனாக இருந்திருக்கவில்லை. கிறிஸ்துவின் உயரிய வெளிப்பாடு, அவரது தனித்தும், அவரது முடிக்கப்பட்ட பணி, அவரது நித்திய தெய்வீகம், மற்றும் அவரது ஒப்பில்லா சாதனை ஆகியவற்றைக் கண்டறிந்து களிகூருகிற ஏராளமானவர்களில் தேவதூதர்களும் உள்ளனர்.

தீர்க்கதரிசனத்தில் நீண்ட காலத்திற்கு முன்பே அறிவிக்கப்பட்டது, இயேசு பெருமைக்குரிய மகிமையைத் தொடர்ந்து அவரது பரலோக சிங்காசன இருப்பிடத்திற்குள் நுழைந்தது போல பரலோக சேனைகளின் நலனுக்காக ஒருவேளை கிறிஸ்துவின் தனித்துவமான நிலை திரும்பத் திரும்ப வந்தது (பார்க்க தானி. 7:13, 14.) நம்முடைய ஆண்டவர் முழு உலகங்களின் மீதும் உன்னதமாக ஆளுகிறார் என்று நாம் தினமும் களிகூர வேண்டும்.

**தேவதூதர்கள், அற்புதங்கள், மற்றும் இயற்கையான நிகழ்வு (1:14)**

அற்புதங்கள் பற்றிய குறிப்புகளுடன் புதிய ஏற்பாடு நிரம்பி இருக்கிறது. இன்று, எப்படியாகிலும், இயற்கைக்கு அப்பாற்பட்டதும் அற்புதமானதுமான அனைத்து வெளிப்பாடுகளும் தேவதூதர்களின் காணக்கூடிய நடவடிக்கைகளும் இணைந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளன என்பது தெளிவாக உள்ளது. அற்புதங்களால் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு, வேதவாக்கியங்கள் நிறைவடைகின்றன (எபி. 2:1-4). அற்புதங்களை நிறுத்துவது வெளிப்பாட்டின் முடிவின் ஒரு இயற்கை விளைவு மட்டுமே என்பதால், இப்போது புதிய வேதவாக்கியங்கள் எழுதப்படவில்லை. புதிய வெளிப்பாடு மற்றும் அற்புதங்கள் எப்போதும் ஒன்றாகச் சென்றன. இன்று தேவன் புதிய வெளிப்பாட்டைக் கொடுத்துக் கொண்டு இருந்தார் என்றால், பின்னர் அற்புதங்கள் ஒரு வழக்கமான நிகழ்வாக இருக்க வேண்டும் மற்றும் இருக்கும்.

ஒரு "அற்புதம்" என்பதைச் பலர் சரியாக வரையறுக்கவில்லை என்பது பிரச்சனை. வேதப்பூர்வமாக, ஒரு அற்புதம் என்பது எப்போதும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயலாக, திவ்விய வல்லமையைத்

தெளிவாக வெளிப்படுத்துகிறது. சூரியன் ஒரு நாளில் மேற்கில் உதித்தால், அது ஒரு அற்புதமாக இருக்கும், ஏனெனில் அது இயற்கை நியதிக்கு முரணானதாக உள்ளது. கணப் பொழுதில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றியதன் மூலம் இயேசு ஒரு அற்புதத்தை அல்லது "அடையாளத்தைச்" செய்தார் (யோவான் 2:11). வேதாகம நிகழ்வுகளை நாம் அற்புதங்களாக சித்தரிக்கும்போது கூட நாம் கவனமாக இருக்க வேண்டும். தேவனின் ஒரு நேரடி தலையீட்டை குறிக்கும் வகையில் ஒரு நிகழ்வு தொடர்பு படுத்தப்பட்டிருக்கவில்லை என்றால், இது அற்புதம் இல்லாமல் இயற்கையான நிகழ்வாக இருந்திருக்கலாம்.

உதாரணமாக, யோசேப்புக்கு கனவுகளை விளக்க முடிந்தது, தேவனிடமிருந்து அவனுக்கு ஒரு நேரடி வெளிப்பாடு இல்லாமல் செய்திருக்க முடியாது (ஆதி. 40; 41). இத்தகைய வெளிப்பாடுகள் அற்புதமாக இருந்திருக்கும். பானபாத்திரக்காரரின் தலைவன் (சமையல்காரர்) யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டு, பின்பு அவனை நினைத்தது ஒரு அதிசயமா? (பார்க்க ஆதி. 40:23.) எகிப்தில் அந்தத் தொடர்ச்சியான சம்பவங்கள் அந்த பானபாத்திரக்காரனின் மறதியுடன் இணைந்திருந்தது. அவனது வாழ்க்கையின் உத்தரவாதத்திற்கான மற்றும் சுதந்திரத்திற்கான தீர்க்கதரிசனத்தை ஒரு மனிதனால் எவ்வாறு மறக்க முடியும்? அத்தகைய ஒரு காரியம் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். நான் தினமும் விஷயங்களை மறக்கிறேன், ஆனால் அவ்வாறான நினைவுத்திறன் குறைபாடுகள் அற்புதங்களா? பிலிப்பு போய்விட வேண்டும் என்று ஒரு தேவதூதன் அவனிடம் பேசி (அப். 8:26) அவனுக்கு அறிவித்தது நிச்சயமாக ஒரு அற்புதமான வெளிப்பாடு, வெறும் உணர்வு அல்ல. எனினும், பிலிப்பு காசாவுக்குச் செல்லும் பாதையில் நடக்க வேண்டியதிருந்தது. ஏசாயாவிலிருந்து ஒருவன் வாசிப்பதைக் கேட்பதற்கு அவனுடைய இரதத்தின்மேல் ஏறிப்போக பிலிப்பு சரியான நேரத்தில் நுழைந்தான் (அப். 8:27-39). அவனது வருகையையின் சரியான நேரமானது ஒரு அற்புதமா அல்லது இயற்கையான நிகழ்வா? பிலிப்புவோ அல்லது அந்த எத்தியோப்பியனோ ஒரு தேவதூதனால் கொண்டு செல்லப்பட்டு வழியில் இறக்கிவிடப்பட்டது ஒரு அற்புதமாக இருந்திருக்க வேண்டும்.

வேதாகமத்தில் ஒரு அற்புதம் திவ்விய வல்லமையின் செயலாக மனித சக்திக்கு அப்பாற்பட்ட நடவடிக்கையின் ஒரு செயல் விளக்கம் என்பது மிகவும் தெளிவாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது (யோவான் 9:16, 17, 24-33). இயேசுவின் எதிரிகள் கூட அவருடைய அற்புதங்களை மறுக்க முடியவில்லை. நமது நாட்களில் கூறப்படும் அற்புதங்களுக்கு அறிவியல் சமூகம் பெரும்பாலும் இயற்கை விளக்கங்களை உருவாக்குகிறது. ஒரு இயற்கை விளக்கம் நியாயமானதாகவும் நம்பத் தகுந்ததாகவும் இருக்குமேயானால், ஒரு

நிகழ்வு அற்புதமாக இருந்தது என்று கூறுவது முட்டாள்தனமாக இருக்கும். சில விஷயங்களை தற்போது இயற்கை அறிவியல் மூலம் விளக்க முடியாமலிருக்கலாம், ஆனால் அவைகள் எதிர்காலத்தில் அவ்வாறு இருப்பதில்லை என்று பொருளல்ல. வேதாகம அற்புதங்கள் - அல்லது "அடையாளங்கள்" அல்லது "செய்கைகள்" - அவ்விதமாக விளக்கப்பட முடியாது.

## "தேவதூதர்" தோற்றங்கள்

"தேவதூதர்" தோற்றங்களைக் கண்டிருப்பதாக அல்லது ஒரு தேவதூதனின் உதவியை அனுபவித்திருப்பதாக ஒரு குழுவினர் கூறிக் கொள்கின்றனர். நாம் சிறுகதை ஆதாரங்களை நம்பலாமா? கூடாது, நம்முடைய விசுவாசம் திவ்விய வெளிப்பாட்டில் வளர்கிறது (ரோமர் 10:17), மனித கற்பனைகளில் அல்ல என்பது சோகமாகும். சிலரது நினைவில் ஒரு தேவதூதன் இருப்பதான அனுபவத்தைக் கொண்டிருப்பது, அவர்களின் இரட்சிப்பை ஆதாரமாகக் கொண்டு அத்தகைய ஒரு "அனுபவத்தைச்" சார்ந்திருக்கும். தேவதூதர்கள் எப்போதும் பின்புலத்தில் இருக்கலாம், ஆனால் தேவ குமாரனுடன் ஒப்பிடும்போது அவர்கள் அற்பமானவர்கள். அவர்கள் சிறிது காலத்திற்கு முன்புறம் வந்தார்கள், ஆனால் இயேசு தான் எப்போதும் நமது இரட்சிப்பின் ஆதாரமாக இருப்பார்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 450. [2]Robert Milligan*, A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 48. [3]1மெக்கபீஸ் போன்ற அதிகாரபூர்வமற்ற திருமறை ஏடுகளில் சில புத்தகங்கள் வரலாற்று மதிப்பைக் கொண்டுள்ளன; ஆனால் அவை "வேதவாக்கியம்" என்ற வார்த்தைக்கு தகுதி உள்ளவைகள் அல்ல. [4]Thomas G. Long, *Hebrews,* Interpretation (Louisville: John Knox Press, 1997), 8. [5]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 4. [6]F. F. Bruce, *The Epistle to the Hebrews,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 3. [7]Jack P. Lewis, "Hebrews 1:1-4: Christ the Prophet, Priest and King," in *Great Texts of the Bible Revisited: Faulkner University Lectures,* ed. M. Floyd Bailey, Mark A. Howell, and Allen Webster (Montgomery, Ala.: Faulkner University, 1993): 332. [8]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 37. [9]Ibid. [10]Bruce, 3.

[11]Hugo McCord, *McCord's New Testament Translation of the Everlasting Gospel* (Henderson, Tenn.: Freed-Hardeman University, 1988). This translation is now referred to as the "Freed-Hardeman" translation. [12]"வித்து" என்னும் கருத்தை கலாத்தியர் 3:16, 19-29 இல் பவுல் விவரித்துள்ளார். [13]Warren W. Wiersbe*, Be Confident: An Expository Study of the Epistle to the Hebrews* (Wheaton, Ill.: Victor Books, 1982), 18. [14]Milligan, 52-54. [15]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.:

Baker Book House, 1984), 28, n. 3. [16]Lewis, 332. [17]Bruce, 4. அண்மைய ஆய்வுகள் சொற்களின் செவிக்கு இனிய ஒலிகள் மூலம் பாடல்களைக் கண்டறிவதற்கான யோசனைக்கு சந்தேகம் எழுப்பியுள்ளன. [18]உலோகத்தை ஒரு விரும்பிய வடிவமாக வடிவமைக்கப் பயன்படும் வடிவம் "அச்சு" என்று அழைக்கப்படுகிறது. இது இங்கே சொற்றொடரின் உண்மையான அர்த்தம். [19]Theodore of Mopsuestia *Commentary on John;* quoted in Hughes, 44, n. 21. [20]Hughes, 41.

[21]"இந்த விளக்கம் [சரியாக பயன்படுத்தப்பட] முடியாது, ஏனென்றால் முத்திரை அது உருவாக்கும் தோற்றத்திலிருந்து வருகிறது என்பதால் குமாரன் பிதாவிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்" என்று (Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983], 66). [22]Bruce, 6. [23]Ibid., 8. [24]This concept is also indicated in Josephus *Antiquities* 15.5.3.136. [25]Lewis, 335; *T. B. Hagiagah* 12b; *T. Levi* 3.4-6. [26]1QS 9:9-11. (This refers to a scroll found in Cave 1 at Qumran.) [27]Guthrie, 73. [28]"*மிட்ராஷ்*" (*தாராஷ்* இலிருந்து "பொருள்விளக்கம்") என்பதாகும். இது வேதாகமத்தின் யூத மொழியியல் மற்றும் விளக்கவுரை எழுத்துக்களுக்கு இந்த சொல் பயன்படுத்தப்பட்டது. [29]Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 64; Lightfoot was speaking of C. H. Dodd, *According to the Scriptures: The Sub-Structure of New Testament Theology* (New York: Charles Scribner's Sons, 1953), 61-110. [30]Lightfoot, 64-65; Lightfoot cited R. V. G. Tasker, *The Old Testament in the New Testament* (London: SCM Press, 1954), 15.

[31]George B. Caird, "The Exegetical Method of the Epistle to the Hebrews," *Canadian Journal of Theology* 5 (January 1959): 45. [32]Bruce, 16, n. 76; Hughes, 59. [33]Guthrie, 74. [34]Bruce, 15. [35]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 28. [36]Wiersbe, 22-23. இறுதி பயன்பாடு இயேசு கிறிஸ்துவைப் பற்றியது என்றாலும் இது சாலொமோன் பற்றிப் பேசப்பட்டது என்று Wiersbe கூறினார். லைட்ஃபுட் கூறினார், "இது முன்னரே இருப்பதாகவும், உயர்ந்த வரிசை வரிசையை குறிக்கிறது" (Lightfoot, 67). [37]Lightfoot, 60. [38]R. C. H. Lenski, *The Interpretation of the Epistle to the Hebrews and of the Epistle of James* (Columbus, Ohio: Wartburg Press, 1946), 51. [39]Guthrie, 76. [40]Kistemaker, 42.

[41]James Thompson, *The Letter to the Hebrews*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1971), 32. [42]George Wesley Buchanan, *To the Hebrews: Translation, Comment, and Conclusions*, The Anchor Bible, vol. 36 (Garden City, N.Y.: Doubleday, 1972), 20. [43]Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 (New York: Doubleday, 2001), 194, 199. [44]Kistemaker, 43. [45]Bruce, 19. [46]Hughes, 64. [47]Bruce, 24. [48]Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 60. [49]Thompson gave as examples *Enoch* 15:6; *Jubilees* 2:2; 15:31. (Thompson, 34.) [50]James Burton Coffman, *Commentary on Hebrews* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 17.

[51]Donald A. Hagner, *Encountering the Book of Hebrews: An Exposition,* Encountering Biblical Studies (Grand Rapids, Mich.: Baker Academic, 2002), 31. [52]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 35. [53]Guthrie, 71. [54]Stedman, 31. [55]James T. Draper, *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 30.